விடுதலைப்புலிகள்

குரல் 16 | ஆடி 1990 | அன்பளிப்பு : 5 ரூபா

# போர் முனையில் புலிகளின் மகத்தான சாதனைகள்....

## பல இராணுவ முகாம்கள் தகர்ப்பு சிங்கள அரசு திணறுகின்றது

### இதுவரை 1500 இராணுவத்தினர் பலி, 2000 ற்கும் மேற்பட்டோர் படுகாயம்,

கடந்த ஐம்பது நாட்களாக நடைபெற்று வரும் தமிழீழ மீட்பு யுத்தத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல சிங்கள இராணுவ முகாம்களை நாசமாக்கி, நூற்றுக்கணக்கில் சிங்கள இராணுவத்தினரை அழித்து ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றி, விடுதலைப் புலி வீரர்கள் மகத்தான வீரசாதனைகளைப் படைத்துள்ளனர். இதுவரை நடந்த போரில் சிங்கள காவல்துறையினர் உட்பட 1500 ற்கும் மேற்பட்ட சிறிலங்காப்படையினர் கொல்லப்பட்டுவிட்டனர். 2000 ற்கும் மேற்பட்ட படையினர் படுகாயப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தப் போரில் இன்றுவரை (23-7-90) 217 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

கடந்த மாதம்(ஆனி) 11 ம் திகதி சிங்களப் படைகளுடன் தொடங்கிய போரானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒருபுதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல சிங்களஇராணுவ முகாம்களும், காவல்துறை நிலையங்களும் எமது போராளிகளினால் நிர்மூலம் செய்யப்பட்டுவிட்டது. மட்டக்களப்பில் - கும்புறுமுனை இராணுவ முகாம், அம்பாறையில்-அலந்தலாவைமினிமுகாம் முல்லைத்தீவு மாவட்டத்தில்-கொக்காவில் இராணுவ முகாம், மன்னார் மாவட்டத்தில் - கொண்டச்சி இராணுவ முகாம், தலைமன்னார்பழைய பாலத்தடி இராணுவ முகாம் ஆகியவை முழுமையாக எமது வீரர்களினால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த முகாம்களிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளோம். எமது வீரர்களின் உக்கிரமான தாக்குதல்களின் விளைவாக சில இராணுவ முகாம்களிலிருந்த சிங்களப் படைகள் தங்களது முகாம்களைக் கைவிட்டு பின் வாங்கிச் சென்று விட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்:- கல்குடா, கஜுவாஞ்சிக்குடி

திருக்கோணமலை மாவட்டத்தில்:-கின்னியா,திரியாய், பன்மதவாச்சி (ஆச்சிரமக்கட்டிடம்), கல்விறவு, தோப்பூர் ஆகிய இராணுவமுகாம்களும்.

அத்துடன் கிளிநொச்சி இராணுவ முகாமும் இவ்வாறு சிங்களப் படையினர் பின்வாங்கிய முகாம்களாகும்.

### கடற் புலிகளின் கரும்புலித் தாக்குதல்

இதுவரை, தாளும் தங்களுக்கு பாதுகாப்பானது என்று எதிரி கருதிச் செயற்பட்டு வந்த, தமிழீழத்தின் கடற் பிரதேசங்களிலும் நாம்

## கடலோடு கலந்த கரும்புலிகள்

10 - 07 - 1990




கரும்புலி மேஜர் காந்தருபன்
(ரு. கோணேஸ்வரன்)
(வல்வெட்டித்துறை)



கரும்புலி கப்டன் கோலின்ஸ்
(ப. சில்வெஸ்ட்டர்)
(மன்னார்)



கரும்புலி கப்டன் வினோத்
வே. திலகராஜா)
(வல்வெட்டித்துறை)



கொண்டைச்சி இராணுவ முகாமிலிருந்து எம்மால் கைப்பற்றப்பட்ட "பவள்" கவச வாகனம்...

போரை விஸ்தரித்து எதிரிகளை தடுமாறச் செய்துள்ளோம்.

10-7-90 அன்று வடமராட்சிக் கடற்பிரதேசத்தில் நங்கூரமிட்டபடி, மக்கள் குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமாக பீரங்கித்தாக்குதல்களை நிகழ்திக் கொண்டிருந்த சிறிலங்காவின் கடற்படைக் கப்பலொன்று வல்வெட்டித்துறை கடலில் வைத்து எமது கரும்புலித்தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் பல கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

வெற்றிகரமாக இத்தாக்குதலை நடாத்திய மூன்று கரும்புலிகளும் கடற் காற்றோடு கலந்து விட்டனர்.

### கொண்டச்சி முகாம் தாக்குதல்

21-06-90 அன்று மன்னார் மாவட்டத்தில் கஜுவத்தை என்ற சிங்களப் பெயரால் அழைக்கப்பட்ட, சிங்களவர்களைக் கொண்டு குடியேற்றப்பட்ட கொண்டைச்சி 100 ஏக்கர் மரமுந்திரிகை பண்ணையில் அமைந்திருந்த சிங்கள இராணுவமுகாம் எமது வீரர்களின் தாக்குதலுக்கு உள்ளானது.

சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற தாக்குதலின் பின் அந்த இராணுவ முகாம் எமது வீரர்களிடம் வீழ்ச்சி கண்டது. சக்தி வாய்ந்த பவள் என அழைக்கப்படும் தென் ஆபிரிக்காவில் தயாரிக்கப்பட்ட கவசவாகனம் ஒன்று உட்பட 24 ஆயுதங்களை எமது வீரர்கள் கைப்பற்றியிருந்தார்கள்.

இம்முகாம் தாக்குதலின் போது எமது தோழர்கள் பன்னிருவர் வீரமரணமடைந்தனர்.

### கொக்காவில் முகாம் தகர்ப்பு

வவுனியா - யாழ்ப்பாணம் பிரதான பாதையில் முறிகண்டிக்கும் மாங்குளத்திற்குமிடையே சிறீலங்காவின் ஒளிபரப்புக் கூட்டுத்தாபனமாகிய ரூபவாகினியின் உப அஞ்சல் நிலையத்துடன் சேர்ந்து அமைக்கப்பட்டிருந்த கொக்காவில் இராணுவ முகாம், 10-07-90 அன்று எமது தாக்குதலுக்கு உட்பட்டது. இரண்டு நாட்கள் நடந்த தொடர்தாக்குதலின் முடிவில் இராணுவமுகாம் எமது வீரர்களிடம் வீழ்ச்சி கண்டது.

இந்த முகாமில் இருந்த உயர் அதிகாரிகள் உட்பட 72 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். சக்தி வாய்ந்த நான்கு இலகு இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட மொத்தம் 80 தானியங்கித் துப்பாக்கிகள் சிங்கள இராணுவத்திடமிருந்து கைப்பற்றப் பட்டது.

இம் முகாம் தாக்குதலில் எமது தோழர்கள் 18 பேர் களப்பலியாகினர்.

### கட்டைபறிச்சான் தாக்குதல்

போர் தொடங்கிய இந்த 50 நாட்களுக்குள் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த கட்டைப் பறிச்சான் என்ற இடத்தில்

(2ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# தமிழீழம் போராடும்

கடந்த ஏழு கிழமைகள் நடந்த தமிழீழ-சிறிலங்காப்போரில் 3000க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப் பட்டனர். 8 இலட்சத்திற்கும் மேற்ப்பட்ட மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள் ளனர்.

தொடர்ந்தும் குண்டு வீச்சு விமானங் கள், உலங்கு வானூர்திகள், முகாம்களில் இருந்து வீசப்படும்எறிகணைகள் கொண்டு தமிழ்மக்கள் தாக்கப் படுகின்றார்கள். சொத்துக்கள் அழிக்கப் படுகின்றன.

தமிழீழ மெங்கும் பொருளாதாரத் தடை தொடர்கின்றது.

தமிழீழமெங்கும் ஒரு மாவட்ட வைத்திய சாலையும் இயங்கவில்லை.

இனப்படுகொலை, அடக்கு முறைகள், என்பவற்றுடன், உணவுத்தடை, எரிபொருட் தடைகள் மூலம் தமிழ் மக்களை போராட் டத்தில் இருந்து விலகச் செய்யலாம் என சிங்கள அரசு நினைக்கின்றது.

போராட்டம் கூர்மை அடைய அடைய நெருக்கடிகள் கூடிக்கொண்டே போகும், அந்த நெருக்கடிகளை ஓர் சவாலாக ஏற்று சளையாது, களையாது அதை எதிர்த்துப் போராடினால் நிச்சயம் நாம் வெற்றி அடைவோம்.

சிறீலங்காஓர் நாடு. தமிழீழம் வேறு ஓர் நாடு.

சிங்கள நாட்டிடம் இருந்து அனுதாபங் களையோ, சலுகைகளையோ எதிர் பார்த்து நாம் போராடவில்லை.

பொருளாதாரத் தடைகள், எரிபொருள் தடைகள் இவைகளை எதிர்த்து தமிழீழம் போராடவேண்டும். போராடும்.

**புலிகளின் குரல்**

சிங்கள அரசில் தங்கியிருக்கும் நிலை யினை மாற்றி எம்மில், எமது உற்பத்தியில் தங்கியிருக்கும் நிலை விரைவில் உருவாக இத்தடைகள் உதவும்.

எரிபொருளுக்கு முழுமையான மாற்றீடு காண தற்போது முடியாது போனாலும் ஓரளவுக்கேனும் மாற்றீடுகளை எம்மால் காணமுடியும்.

இந்தியாவின் தலையீட்டுக்குப் பயந்து உலக அபிப்பிராயத்திற்குப் பயந்து சிறி லங்கா அரசு உணவை, மருந்தை தமிழீழத் திற்கு அனுப்புவதாக நடிக்கின்றது.

சிங்கள தேசம் எதைச் செய்வதன் மூலம் எம்மை அடிபணிய வைக்கலாம் என எதிர்பார்க்கின்றதோ அதை எதிர்த்து, போராடி வெற்றி பெறும் மனோவலிமை யும், ஆற்றலும் தமிழீழ மக்களுக்குண்டு.

இன்று சிங்கள தேசமே தமிழ் மக்கள் மீது போர் தொடுத்துள்ளது. பௌத்த பிக்குகள்கூட ஆயுதமேந்தி நிற்கின்றார் கள். சிங்கள வான் படை. கடற் படை, தரைப் படை, காவல் துறை, ஊர்காவற் படை, எல்லைக்கிராமத்தில் வாழும் ஆயுத மேந்திய சிங்கள மக்கள் இவர்களுக்கு எதிராக, தமிழீழம் தனது விடுதலைக்காகப் போராடுகின்றது.

18 ஆண்டுகாலம் நாம் எமது இலட்சி யத்தை கைவிடாது ஆயுதப் போராட் டத்தை நடாத்தியிருக்கிறோம்.

87ல் ராஜீவ் ஜே. ஆர் அடிமை சாசனத் தோடு வந்த இந்தியப் படை எம்மீது நாம் விரும்பாத தீர்வை ஆயுத முனையில் திணிக்க முயன்ற போது நாம் அதற்கெ திராகப் போராடினோம்.

எவ்வளவோ அழுத்தங்களுக்கும் மத்தி யில் தமிழீழம்போராடி இந்தியப்படையை வெளியேற்றுவதில் வெற்றியும் பெற்றது.

யாரும் எம்மீது நாம் விரும்பாத தீர்வு ஒன்றைத் திணிக்க முடியாது. திணிக்க நாம் அனுமதிக்கவும் போவதில்லை.

எமது பாதுகாப்பை நாம் யார் கையி லும் தரமுடியாது. சிங்கள தேசத்திடம் சலுகைகளை எதிர்பார்த்து நாம் போராட வும் இல்லை, பேசவும் இல்லை.

இடைக்காலத் தீர்வுகள் நிரந்தரப் பாது காப்பையோ, நிரந்தர அமைதியையோ தரப்போவதில்லை.

எமது மண் முழுமையாக சிங்கள ஆதிக் கத்தில் இருந்து விடுபடும் வரை, எமது மக்களின் பாதுகாப்பு நிரந்தரமாகும் வரை ஆயுதப் போராட்டம் ஓயாது.


தமிழீழ மண்ணில் ஆயுதம் தமிழர்களிடம் இருந்து பிரிக்க முடியாத ஓர் அங்கம்.

சிங்கள அரசு பொருளாதாரத் தடையை விதிக்கட்டும். எரிபொருள் தடையை விதிக் கட்டும். மின்சாரத்தை தடை செய்யட்டும்.

சிங்கள ஆதிக்கத்தில் இருந்து தமிழீழம் விடுபட இதைத் தவிர வேறு நல்ல நேரம் அமையாது.

எல்லா முனைகளிலும் சிங்கள ஆக்கிர மிப்பை - அழுத்தத்தை எதிர்த்து தமிழீழம் போராடும்.

இப் போராட்டத்தின் வெற்றி என்பது தமிழீழத்தின் பிறப்பாகும்.



அச்சுதன்!

திருகோணமலையில்
புலேந்தி அம்மான்
உன்னை
புலிவீரன் ஆக்கியபோது,

உனக்கு

அப்பாவையும்
அம்மாவையும் தெரியாது
பிறந்த நாளும்
ஊரும் தெரியாது.

ஆனாலும்,

நீ
அநாதரவானவன் அல்ல.

ஏனென்றால்,

இந்தியப்படைச் சண்டையில்
வீரச்சாவை சந்தித்தபோது

நீ.........

மக்களின் குழந்தை
போராளிகள் உன் தோழர்கள்
இந்த மண்
உனக்குச் சொந்தம்.

அச்சுதன் வவுனியா பன்றிக்கெய்தகுளத்தில்
26-06-1989 அன்று வீரமரணமடைந்தான்.

## போர்முனையில்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் எமது தோழர்களால் மேற் கொள்ளப்பட்ட இரு வேறு தாக்குதல் முயற்சியில் மட்டும் சுமார் 56 சிங்கள இரா ணுவத்தினர் கொல்லப்பட்டு அவர்களின் ஆயுதங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட் டன.

13-06-90 அன்று மூதூர் சிங்கள இராணுவமுகாமையும் காவல்துறை நிலையத்தையும் முற்றுகையிட்டு தாக்குதல் நடாத்திக் கொண்டிருந் தோம். இச் சிங்களப் படை யினருக்கு உதவியாக சற்று தூரத்தில் இருந்ததிலக்கண்ணி எனும் இடத்தில் கடற்படைப் படகுகள் மூலம் தரையிறக் கப்பட்ட சுமார் 70 சிங்கள அதிரடிப்படையினர் முற்று கைக்குள்ளாகியிருந்த படை முகாம்களை நோக்கி நகரத் தொடங்கினர். இவர்கள் கட் டைபறிச்சானில் வழிமறிக் கப்பட்டுத் தாக்கப்பட்டனர்.

இச் சண்டையில் 40 ற்கும் அதிகமான அதிரடிப்படையி னர் கொல்லப்பட்டனர். எஞ்சி யோர் ஓடித்தப்பியுள்ளனர். இந்தச் சண்டையில் 45 ஆயு தங்களைக் கைப்பற்றினோம்.

## மாங்குளம் தாக்குதல்

17-07-90 அன்று மாங்கு ளம் முகாமிலிருந்து விமானப் படைகளின் துணையுடன் வெளியேற முயன்ற சிங்கள இராணுவம் எமது கடுந்தாக் குதலுக்கு உள்ளாகியது.

சுமார் 8 மணி நேரம்நடந்த உக்கிரமான இந்தச் சண்டை யில் 15 பேரை இழந்த நிலை யில் இராணுவம் பின் வாங்கி முகாமுக்குள் சென்றது. இந் தச் சண்டையில் 12 ஆயுதங் களைக் கைப்பற்றினோம்.

எமது தரப்பில் 4 போரா ளிகள் வீரமரணமடைந்தனர்.

## லெப்.கேணல் றீகனின் வீரமரணமும், அம்பாறைமினிமுகாம் தகர்ப்பும்.

16-07-1990 அன்று அம் பாறை மாவட்டத்திலுள்ள 35ம் கட்டை என்ற கிராமத் திலிருந்த சிங்கள மினிமுகாம் ஒன்றிலிருந்து வெளியேறிய படையினர்மீது எமது தோழர் கள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றின் போது மட்டு - அம் பாறை பிரதித் தளபதி லெப். கேணல் றீகன் வீரமரண மடைந்தார்.

இதைத் தொடர்ந்து அன் றிரவு அம்பினி முகாம் மீது எமது வீரர்கள் பெரும் தாக் குதல் ஒன்றை நடாத்தி முகாமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இறந்த இராணுவத்தினர் களின் உடல்களைக் கைவிட்டு விட்டு எஞ்சிய இராணுவத் தினர் ஓடித் தப்பி விட்டனர். அவர்களின் ஆயுதங்களைக் கைப்பற்றியபின் முகாம் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டது.

# உடும்பன்குளம் படுகொலை

**1986ம் ஆண்டு மாசிமாதம் 19ம் திகதி அம்பாறை மாவட்டத்திலுள்ள உடும்பன்குளம் எனும் சிறிய கிராமத்தில் - வயலில் வேலை செய்து கொண்டிருந்த 60 ற்கும் மேற்பட்ட தமிழ் விவசாயிகள் சிங்கள இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்கள்.**

**இப்படுகொலையானது அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழர்களை மிரட்டி அவர்களை அங்கிருந்து விரட்டியடித்து அம்மண்ணை அபகரிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.**

தங்கவேலாயுதபுரம் — பறிபோய்க் கொண்டிருக்கும் அம்பாறை மாவட்டத்தின் பழந்தமிழ்க் கிராமங்களில் ஒன்று. இந்தப் புராதனக் கிராமத்தை அணைத்திருந்த உடும்பன் குள வயல் நிலங்களில் விளைந்த நெற் கதிர்களின் கலகலப்பு ஒலித்துக் கொண்டிருந்தது.

வருடத்தின் பெரும்பகுதி வெறுமையாகவே இருக்கும் உடும்பன் குளம் மாரி காலத்தில் தான் குதூகலிக்கும்., பெரும்போக நெற்செய்கைக்காக அயற் கிராமங்களின் மக்கள் அங்கே வருவார்கள். வாடிகளை அமைத்து அங்கே வாழ்வார்கள். அந்த மக்களுக்கு அது கடின உழைப்பை சிந்தும் மகிழ்ச்சிகரமான நாட்கள். ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் அதுதான் மகிழ்ச்சியான வாழ்க்கைக்காலம்.

அது அறுவடைக் காலம்., உடும்பன் குளத்தின் நூறு ஏக்கர் வயல் நிலங்களும் நன்றாகவே விளைந்திருந்தது. சில வயல்களில் சூடு வைத்திருந்தனர், சில வயல்களில் துப்பட்டிகள் (சிறிய நெற் கட்டுக்கள்) அடுக்கப்பட்டிருந்தன. சில வயல்களில் அறுவடைக்குத் தயாராக நெற்கதிர்கள் சாய்ந்து கிடந்தன.

## 1986ஆம் ஆண்டு மாசி 19ஆம் திகதி

காலை 7 மணி, அதி காலையிலேயே எழுந்து விட்ட அந்த விவசாயிகள் வயல்களில் தமது வேலைகளில் கவனத்தை செலுத்திக்கொண்டிருந்தார்கள். இரவிரவாக சூட்டுக் களத்தில் போராடிய உழவு இயந்திரங்கள் ஓய்ந்து போய் நின்றன. இளஞ் சூரியனின் கதிர்கள் அந்த விவசாயிகளின் வெற்று மேனிகளில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது. அவர்களின் உழைப்பின், வியர்வையின் பலனை அவர்கள் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தார்கள்.

கிளிகளின் பறப்புகளும், கீச்சல் ஒலிகளும் அடர்ந்த காட்டினால் சூழப்பட்ட அந்த வயல்நிலங்களின் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தன. அறுவடையை முடித்துவிட்டு ஊருக்குச் செல்லும் ஆவல், அவர்கள் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் குதூகலத்துடன் அறுவடை செய்து கொண்டிருந்த தமிழ் விவசாயிகளை மனித அறுவடை செய்ய சிங்கள வெறிப்படைகள் சுற்றிவளைத்துப் படுத்திருந்ததை அந்த அப்பாவி விவசாயிகள் அறிந்திருக்கவில்லை.

காடுகளில் பதுங்கி இருந்த சிங்கள இராணுவத்தினர் திடீரென வெறிபிடித்தவர்கள் போல சத்தமிட்டபடி துப்பாக்கிகளை இயக்கியபடியே வயல் வெளிகளில் வேலை செய்து கொண்டிருந்த மக்களைச்சுற்றிவளைத்தார்கள். அவர்கள் கதறிக் கொண்டிருந்தார்கள், பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

வயல் வெளியில் திரும்பிப் பார்த்த இடமெல்லாம் பச்சைநிறப் பேய்கள். அங்கு எவருமே தப்புவதற்கு வழி இருக்கவில்லை. சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்டவர்கள் எல்லாம் கொடூரமாகத் தாக்கப் பட்டுக் கொண்டிருந்தார்கள், ஆண்களும் பெண்களும் வித்தியாசமில்லாமல் தாக்கப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்ட அனைவரையும் மந்தைகளைச் சாய்ப்பது போல விரட்டி வயல் வெளிகளின் ஓரத்தில் இருந்த கிரவல் பாதைக்குகொண்டு சென்றார்கள். இச் சந்தர்ப்பத்தில் மிருக வெறிபிடித்த இராணுவத்தினரால் பல பெண்கள் கதறக்கதற காட்டுக்குள் இழுத்துச் செல்லப் பட்டார்கள். அவர்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டார்கள்.

கிரவல் பாதைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஆண்களும், பெண்களும் அங்கே தனித்தனியாகப் பிரிக்கப்பட்டார்கள், அவர்களின் கண்ணீருக்கும் கதறல்களுக்குமிடையே அவர்கள் அடிக்கடி தாக்கப்பட்டார்கள். அங்கும் இளம் பெண்கள் இழுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஆண்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருவர் இருவராக கட்டப்பட்டு அங்கே நின்ற உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டார்கள், தமது மகன்மாருக்கு, கணவன்மார்களுக்கு ஏதோ விபரீதம் நடக்கப்போகின்றது என்பதை உணர்ந்து கொண்ட பெண்கள் அவர்களை விடுவிக்கும்படி மன்றாடினார்கள், அந்தக் கொடிய மிருகங்களின், கால்களில் விழுந்து கதறினார்கள்...மன்றாடினார்கள். ஆனால் இரக்கமற்ற அந்தச் சிங்கள வெறியர்களின் காதுகளில் அந்த அப்பாவி ஜீவன்களின் வேண்டுதல்கள் விழவில்லை. அவர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள்.

உச்சிவெயில் நேரம்.

உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்ட கிராமத்தவர்கள், வயல் வெளியின் சூட்டுக்களம் நோக்கிக் கொண்டு செல்லப் படுகிறார்கள், இளைஞர்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் எல்லோரும் அழைத்துச் செல்லப்பட்டார்கள், அவர்களின் முகங்களில் பயங்கலந்த கலவரம், இந்த வெறிபிடித்த இராணுவத்தினருக்கு எதிராக எதுவுமே செய்ய முடியாத நிலை அவர்கள் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வைக்கோற் போர் அருகே சென்றதும் உழவு இயந்திரம் நிறுத்தப்பட்டது. அந்த விவசாயிகள் இருவர் இருவராக இறக்கப்பட்டார்கள்

இராணுவத்தினரின் துப்பாக்கிகள் இயங்கத் தொடங்கின.

எங்கள் தேசம் எமது மக்களின் குருதியினால் தோய்ந்து கொண்டிருந்தது... அவர்களின் இறுதி ஓலங்களும், முனகல்களும் உடும்பன் குள காட்டுப் பகுதியை நிறைத்து, எதிரொலித்து ஓய்ந்தது. தங்களது சேமிப்புகளை அந்நிலத்தில் கொட்டி, வியர்வைத் துளிகளினால் அப்பயிர்களுக்கு உரம் சேர்த்து, அதன் பயனை அறுவடை செய்யக்காத்திருந்த அந்த மண்ணின் மைந்தர்கள்- அவர்களின் சூட்டுக் களத்திலேயே உயிரற்ற உடல்களாக வீசப்பட்டுக் கிடந்தார்கள். எல்லாமாக 60 ற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் இன வெறி கொண்டவர்களின் இரத்தப் பசிக்கு பலியாகிக் கிடந்தார்கள்- இதில் நாடோடிகளாக வாழ்க்கை நடாத்தும் குறவர் இன ஆண்களும் அடங்குவர். இவர்கள் கூலிக்கு வேலை செய்து வாழ்பவர்கள்.

அதே நேரம் இன்னொரு சிறிலங்கா இராணுவக்குழு வாடிகளுக்குள் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான பொருட்களை கொள்ளையிடத் தொடங்குகிறார்கள். வானொலிப் பெட்டிகள், நகை, பணம்... பெறுமதியான அனைத்தையுமே எடுத்தார்கள். அறுவடை செய்யப்பட்டு கட்டி வைக்கப்பட்டிருந்த நெல்லு மூடைகளை அந்தக் கிராமத்தவரின் உழவு இயந்திரங்களிலேயே ஏற்றினார்கள்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் சூட்டுமேட்டில் குவிக்கப் படுகிறது. நெற்கதிர் குவியல்களினால் அவர்களின் உடல்கள் மூடப்படுகின்றன, சற்று நேரத்திற்கு முன்னர் நெற் கதிர்களை அணைத்து மகிழ்ந்து கொண்டிருந்தவர்களின் உயிரற்ற உடல்கள் அந்த நெற் கதிர்களாலேயே மூடப்பட்டன. அருகிலிருந்த குடிசைகளின் மரங்களும், காய்ந்த ஓலைகளும் அதன் மேலே போடப் படுகின்றன. ஆனால் அவர்களின் இறுதி நேர முனகல்கள் இன்னும் ஓயவில்லை. அந்தக் கொடூரம் நிறைந்த அராஜக வாதிகள் அதனை கேட்கவும் இல்லை. அவர்கள் சூட்டுக் களத்திற்கு தீ வைத்தார்கள். அங்கு நின்ற உழவு இயந்திரங்களுக்கும், அடுக்கப்பட்டிருந்த நெற் கதிர் குவியல்களுக்கும் தீ யிட்டார்கள். உடும்பன் குளம் எரிந்து கொண்டிருந்தது. அந்த ஏழை விவசாயிகளின் உழைப்பின் பலன்களெல்லாம் அவர்களுடனேயே சேர்ந்து எரிந்து கொண்டிருந்தது.

தமிழீழத்தின் எல்லைப்புற மாவட்டமான அம்பாறையில் உடும்பன் குளத்தைப் போலத் தான் பல தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டுவிட்டன அவை பறிக்கப்பட்டுவிட்டன. பல தமிழ் கிராமத்து மக்கள் இப்படித்தான் அழிக்கப்பட்டு விட்டார்கள். எங்கள் இரா

(11ஆம் பக்கம் பார்க்க)

### உடும்பன் குள சம்பவத்தில் கொல்லப்பட்ட மக்களின் விபரங்கள்

தங்கவேலாயுதபுரம் கிராமத்தைச் சேர்ந்த...

1. சினித்தம்பி சிவபாலன் (வயது 28)
2. சினித்தம்பி தவநாதன் (வயது 30)
3. சினித்தம்பி அருள்செல்வம் (வயது 18)
4. குமாரவேல் நாகராசா (வயது 27)
5. சுவாமி டேவிட் (வயது 29)
6. கணபதி வடிவேல் (வயது 27)
7. பொன்னம்பலம் யோகராசா (வயது 18)
8. விஸ்வகேது இராசாராம் (வயது 30)
9. கணேசமூர்த்தி பேரின்பன் (வயது 28)
10. விஸ்வகேது இராசா (வயது 23)
11. இராசையா சதாசிவம் (வயது 35)
12. ஆறுமுகம் சோமசுந்தரம் (வயது 35)
13. தர்மலிங்கம் சுபாரட்னம் (வயது 22)
14. கணேசபிள்ளை மோகனராசா (வயது 22)
15. இராசையன் தவேந்திரன் (வயது 18)
16. சில்வஸ்ரர் இன்னாசி (வயது 32)
17. மயில்வாகனம் தியாகராசா (வயது 13)
18. மைலன் தியாகராசா (வயது 18)
19. சுந்தரம் சின்னவன் (வயது 20)
20. தர்மன் (வயது 22)
21. இராமசாமி கந்தையா (வயது 48)
22. பத்மநாதன்
23. மார்க்கண்டு இரவீந்திரன்
24. பொன்னன் இராசதுரை

அக்கரைப்பற்று கிராமத்தைச் சேர்ந்த...

25. ஆறுமுகம் நல்லதம்பி (வயது 63)
26. நல்லதம்பி விநாயகமூர்த்தி (வயது 35)
27. நல்லதம்பி கோபாலகிஸ்ணன் (வயது 23)
28. கந்தப்பு பாக்கியராசா (வயது 26)
29. கதிரேசு வைரமுத்து (வயது 60)
30. வைரமுத்து சுந்தரலிங்கம் (வயது 22)
31. அருண் சோமசுந்தரம் (வயது 32)
32. கந்தசாமி இராமலிங்கம் (வயது 60)
33. சினித்தம்பி தாமோதரன் (வயது 40)
34. இராசையா சதாசிவம் (வயது 35)
35. சின்னத்தம்பி துரையப்பு (வயது 45)
36. நல்லதம்பி கணபதிப்பிள்ளை (வயது 25)

கொம்மாந்துறை - செங்கலடியைச் சேர்ந்த...

37. தர்மலிங்கம் கனகேஸ்வரன் (வயது 18)
38. கணபதிப்பிள்ளை தங்கராசா (வயது 38)
39. மாணிக்கம் கிருபை (வயது 28)

இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்ட உழவு இயந்திரச் சாரதிகள்.

40. மாணிக்கப்போடி திவ்வியநாதன் (வயது 30)
41. நாசப்பு செல்லையா (வயது 32)
42. ஞானமுத்து புவனேந்திரன் (வயது 30)

மற்றும்

43. ஜெயராஜ் (வயது 28)
44. நாசப்பு சாமித்தம்பி (வயது 30)
45. நாசப்பு செபமாலை (வயது 20)
46. வெங்கரன் குலநாதன் (வயது 27)
47. துரை இராமலிங்கம் (வயது 26)
48. முத்துசாமி முத்துலிங்கம் (வயது 20)
49. இரங்கன் பாவுல் (வயது 35)

இத்துடன் கூலி வேலைக்கென உடும்பன்குளம் வந்திருந்த நாடோடிகளான எட்டு குறவர் இன ஆண்களும் கொல்லப்பட்டனர். இவர்களுடன் பிற ஊர்களில் இருந்து வந்து நாட்கூலி வேலை செய்து சம்பாதிக்கும் தொழிலாளர்கள் பலரும் கொல்லப்பட்டனர்.



கருகிய தமிழர்களின் உடல்களுக்கு முன்னால் நின்று கதறி அழும் தமிழீழப் பெண்கள்

# நிறுவனமயப்படுத்தப்பட்டு, வாழ்வுமயப்படுத்தப்பட்ட சிங்கள - பௌத்த பேரினவாதம்.

**சிங்கள - பௌத்த பேரினவாதமானது எவ்விதம் சிறிலங்காவின் அனைத்து அங்கங்களிற்குள்ளும் தன்னை இறுகப் பிணைத்துள்ளது என்பதையும்,**

**சிறிலங்காவின் அரச இயந்திரத்தை அது எவ்விதம் ஆக்கிரமித்துள்ளது என்பதையும், இக்கட்டுரை தமிழீழ மக்களுக்குக் காட்டமுயல்கின்றது.**

**சிறிலங்காவின் சிங்களத் தலைவர்கள் அனைவரும் இந்த சிங்கள - பௌத்த பேரினவாதச் சகதிக்குள் மூழ்கிக்கிடந்து அதற்கு ஆதரவாகச் செயற்பட்டதையும் கடந்த கால வரலாறு காட்டும்.**

**சுருக்கமாகச் சொன்னால் சிங்கள - பௌத்த பேரினவாதமானது சிங்கள மக்களிடமிருந்து பிரிக்கமுடியாத வகையில் அவர்களது வாழ்நிலையுடன் இரண்டறக் கலந்துள்ளது என்பதை இக்கட்டுரை தெளிவாக்குகின்றது.**

இலங்கையில் சிங்கள - பௌத்தம் நிறுவனமயப் பட்டுள்ளது. இந்நிறுவனத்தைத் திருப்திப் படுத்துவதும், தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய இந்நிறுவனத்தை தூண்டிப் பயன்படுத்துவதும் இலங்கை அரசியலின் ஒரு முக்கிய போக்காய் அமைந்துள்ளது.



டி.எஸ்.சேனநாயக்கா

- ★ நவீன வரலாற்றில், பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் 1880களில் கிறிஸ்தவ எதிர்ப்பை தனது முதல் மூச்சாக இந்நிறுவனம் கொண்டது. இதனால் 1883 ஆம் ஆண்டு கொட்டாஞ்சேனையில்வெடித்த ஒரு கலகத்தில் சிலர் பலியாகினர்.
- ★ 1910 களில் இஸ்லாமிய எதிர்ப்பு முனைப்புப் பெற்றது. இம்முரண்பாடானது 1915 ஆம் ஆண்டு கம்பளைக் கலகமாக வெடித்தது இதில் பலர் பலியாகினர்.
- ★ 1950களில்தமிழ் எதிர்ப்பு முனைப்புப்பெற்றது. இது மொழிப் பிரச்சினையாக வடிவம் பெற்று 1956ஆம் ஆண்டு சிறு சிறு குழப்பங்களாக உருப்பெற்று 1958ல் பெரும் கலகமாக வெடித்தது. இதிற் பலர் பலியாகினர்.

## வாக்களிக்கப்பட்ட பூமியும், தம்மதீபமும்

*"வாக்களிக்கப்பட்ட பூமி"* என்பது யூத இனவாதத்திற்கு எவ்வாறு அச்சாணியோ அவ்வாறே "தம்மதீப" கொள்கை என்பது சிங்கள - பௌத்த பேரின வாதத்திற்கு அச்சாணியாகும்.

யூதர்கள் எங்குதான் சென்றால் என்ன, இறுதியில் அவர்கள் வந்தடைவது அவர்களுக்குச் சொந்தமான இஸ்ரவேல் பூமி என கி.மு. 1000 ஆம் ஆண்டில் மோஸஸ் எனப்படும் இறைதூதர் யூதர்களுக்கு வாக்களித்திருந்தார் என்பதே ''வாக்களிக்கப்பட்ட பூமி'' என்பதன் ஐதீகமாகும்; இது இன்று ''சியோனிச ஆக்கிரமிப்பு வாதம்'' என அழைக்கப்படுகின்றது.

''தம்மதீபமும்'' இதே போன்றதொன்றே. 'தம்மதீப' என்பதன் அர்த்தம் என்னவெனில் பௌத்ததர்மத்தை பேணிப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்குமென கி.மு. 6 ஆம் நூற்றாண்டிலே புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு இலங்கை என்பதாகும்.

யூத இனத்திற்கென மோஸஸால் ''வாக்களிக்கப்பட்ட பூமி'' இஸ்ரவேல் என்பது போல சிங்கள - பௌத்தத்திற்கென புத்தபிரானால் ''தேர்ந்தெடுக்கப்பட்ட பூமி'' இலங்கை என்பதே இந்த ஐதிகமாகும். இந்த ஐதிகமே சிங்கள - பௌத்த பேரினவாதத்தினது அடிப்படையும் அச்சாணியும் ஆகும்.

கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மகாவம்சம் எனும் நூலில் ''தம்மதீப'' எனப்படும் இந்த ஐதீகம் எழுதப்பட்டுள்ளது. இந்த ஐதீகத்தை அடிப்படையாகக் கொண்டே இலங்கையின் ஆயிரமாண்டு கால வரலாறு



டட்லி. சேனநாயக்கா

இந்நூலில் எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறுஒரு வாக்கியத்தை புத்தபிரான்கூறினார் எனவரலாற்றில் எந்தவித ஆதாரமும் இல்லை. இது ஒரு முழுக் கற்பனையும், வஞ்சகம் நிறைந்த பொய்யுமாகும்.

இந்த ''தம்மதீப'' ஐதிகத்தின் படி இலங்கை சிங்கள - பௌத்தர்களுக்கே சொந்தமானது. இங்கு வாழும் ஏனைய இன மதத்தவர்கள் இத்தீவுக்கு அந்நியர்களே என்பதாகும்.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய துவரகரமான அம்சம் என்னவெனில் மொழி, இனம், மதம், அரசு, அரசியல், நிர்வாகம் ஆகிய ஆறு அம்சங்களும் ''தம்மதீப'' கொள்கையின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்டு முழுமையாக நிறுவனமயப் படுத்தப்பட்டுள்ளது என்பதுதான். குறிப்பாக அரசும், மதமும் மொழியும் ஒன்றுடன் ஒன்று மிக இறுக்கமாக பின்னிப் பிணைந்து விட்டன. இதற்கேற்பவே அரசியல் பேசவும் நடாத்தவும்படுகின்றது. இவற்றிற்கு ஏற்பவே நிர்வாக இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் *நிர்வாக அதிகாரத்துவமானது* (Bureaueraey) *சிங்கள-பௌத்த நிர்வாக அதிகாரத்துவமாக நிலை பெற்றுவிட்டது.*

இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்புத் திட்டத்திலும், (1972) இரண்டாவது குடியரசு அரசியலமைப்புத்திட்டத்திலும்(1978) பௌத்தம் சம்பந்தமாக பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.



சேர். ஜோன் கொத்தலாவல

" இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு முதன்மைத்தானம் வழங்க வேண்டும். அத்துடன் பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாத்தலும் வளர்த்தலும் அரசின் கடமையாதலும் வேண்டும்.''

இதன் மூலம் பௌத்தமும் அரசும் இரண்டறக் கலந்துவிட்டன என்பது தெளிவாகின்றது.

இலங்கையில் இன்று பின்பற்றப்படும் பௌத்தம் 'தேரவாத'' பௌத்தம் என அழைக்கப்படுகின்றது. சியாம் நிகாயம், அமரபுர நிகாயம், ராமண்ய நிகாயம் என மூன்று நிகாயங்கள் இலங்கையில் தற்போது உள்ளன இம்மூன்று நிகாயங்களும் தனித்தனியே பீடங்களையும் பீடாதிபதிகளையும் கொண்டுள்ளன. சியாம் நிகாயத்தைச் சேர்ந்த அஸ்கிரிய பீடம், மல்வத்த பீடம் எனும் இரு பீடங்களுமே இங்குள்ள பீடங்களுள் பெரிய பீடங்களாகும்.

இந்த வகையில் இலங்கையிலுள்ள பௌத்தமானது பல கிளைப்பிரிவுகளைக் கொண்டு அமைப்புரீதியில் நிறுவனமயப்பட்ட ஒன்றாகும் இலங்கையிலுள்ள ஒவ்வொரு பௌத்த பிக்குவும் பீடங்களை நோக்கி மத்திய மயப்படுத்தப்பட்டுள்ளனர். இங்குள்ள ஒவ்வொரு பீடமும் அரசியல் மயப்பட்டுள்ளன. ஆதலினால் சகல பிக்குகளும் கிளைகளிலும், கிராமங்களிலும் அரசியற் பிக்குக்களாகச் செயற்படுகின்றனர். இவ்வாறு இப்பிக்குக்களினால் நாடு தழுவிய ரீதியில் அரசியல் மையத்துவத்தை - உருவாக்க முடிகிறது.

பிக்குக்கள் மத்தியில் தென்னிலங்கை அரசியல் சம்பந்தமாக கட்சி வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் சகல பிக்குக்களிடமும் ஓர் அரசியல் மையக் கருத்துஉண்டு. அதுவே ''தம்மதீப'' என்பதாகும். இதில் தமிழ் எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு ஆகிய இரண்டும் அடிநாதங்களாகும்.

இந்த மத நிறுவனத்திற்கு உட்பட்டுக்கீழ்ப்படிந்து போவதே அரசியல் ஆதாயத்திற்குரிய இலகுவான வழி என்பதால் சிங்கள அரசியல் வாதிகள் அவ்வாறே செய்கின்றனர். இதனைவிடவும் ஒரு மோசமான அடுத்த படிக்கு அரசியல் வாதிகள் தாவி விடுகின்றனர். அதாவது இந்த மத நிறுவனம் அரசியற் பலம் மிக்கது என்பதனால் தமது தேவைக்கேற்ப இந்நிறுவனத்தைத் தூண்டிவிடக்கூடிய அரசியலைப்பேசி அதன் மூலம் அரசியல் வாதிகள் அரசியல் ஆதாயம் தேடுகின்றனர். இதனால் பேரின வாதமானது ஒன்றில் இன்னொன்று தங்கி நின்று, ஒன்றை மற்றொன்று தூண்டி மேலும் மேலும் வளர்ந்து சென்று சங்கிலித் தொடரானதர்க்கபூர்வ வளர்ச்சி நிலையை அடைகின்றது. இதனால் பேரின வாதமானது தீர்க்கப்பட முடியாத நிலையான நிறுவனத் தன்மையை அடைந்து விடுகிறது.

பொதுவாக இலங்கை பற்றிய வரலாற்று நூல்கள் பேரின வாதத்திற்கு ஊட்டச் சக்தி ஏற்றக்கூடியதாய்எழுதப்பட்டுள்ளன. பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை பேரின வாதத்தை ஊட்டக் கூடிய வகையில் பாடவிதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வரலாறு பற்றிய ஆராட்சி நிறுவனங்களும், ஆராட்சி ஆளர்களும் பேரின வாதத்திற்குச் சேவை செய்யக்கூடிய கருத்துக்களை உருவாக்குவதன் மூலம் தமது நலன்களையும், பதவி அந்தஸ்துக்களையும் பெறுகின்றனர். வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் என்பனபேரினவாதப் பிரச்சாரங்களிலும், கருத்துருவாக்கத்திலும் குளிர்காய்கின்றன. மேலும் அரசியல் மேடைப் பேச்சுக்கள், சமூக சேவை நிறுவனங்களின் பிரச்சாரங்கள், செயற்பாடுகள், கலைஇலக்கியம், திரைப்படம் ஆகிய அனைத்திலும் பேரின வாத எண்ணக்கரு பரவிக் காணப்படுகின்றது. மேலும் மதவைபவங்களிலும், மதப் பிரச்சாரங்களிலும் பேரின வாதமிருக்கும். எனவேபொதுவாக ஒரு சிங்கள பிரசையை எடுத்துக் கொண்டால் அந்த நபர் பிறந்ததிலிருந்து அவர் கடந்து செல்லும் சகல வாழ்நிலைக் கட்டங்களிலும்பேரின வாதத்தினால் உருக்கி வார்க்கப்பட்டவராகின்றார்.



எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா



சிறிமாவோ பண்டாரநாயக்கா

விதிவிலக்காக சில புத்திஜீவிகளும், சில முற்போக்கு எண்ணங் கொண்டவர்களும் பேரின வாதத்திலிருந்து சற்று விடுபட்டு தாராண்மைத் தன்மை கொண்டவர்களாக விளங்குவதுண்டு. ஆனால் அவர்களும் கூட முழுக்க முழுக்க பேரினவாத எல்லையைக் கடந்து வருபவர்களல்ல

(11ஆம் பக்கம் பார்க்க)



ஜெ. ஆர். ஜெயவர்த்தனா



ஆர். பிரேமதாஸ

# தமிழீழத்தின் அனைத்து வளங்களும் - பலங்களும் எமது விடுதலைப்போராட்டத்திற்கே சொந்தமாகும்.

அன்பான தமிழீழ மக்களே!

என்றுமில்லாத வகையில் சிறீலங்கா அரசுதமிழ்இன அழிப்பு வேலைகளில் தனது முழுப் பலத்தையும்- வளத்தையும் பிரயோகித்துக் கொண்டிருக்கின்றது.

இத்தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு சிங்கள மக்கள் மத்தியிலிருக்கும் அனைத்து அமைப்புகளும் சிறீலங்கா அரசிற்கு தங்களது முழு ஒத்துளைப்புக்களையும், உதவிகளையும் கொடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

இத்திவிர இன அழிப்பு நடவடிக்கைகளிலிருந்து எமது இனத்தைப் பாதுகாப்பதற்காக இங்கு ஓர் விடுதலைப்போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. இவ்விடுதலைப் போராட்டமானது இன்று, மேலும் மேலும் கூர்மைபெற்று ஒரு போராகப் பரிணாமம் கண்டுள்ளது.

இப்போர் காரணமாக எமது விடுதலை இராணுவத்திற்குபல புதிய தேவைகள் எழுந்துள்ளன.

போராட்டம் கூர்மை அடைய, அடைய இத் தேவைகளும் அதிகரித்துச் செல்லும்.

போர் என்பது இரண்டு நாட்டு இராணுவங்களுக்கிடையில் நிகழ்வது.

இங்கே சிங்கள தேசத்தின் இராணுவத்திற்கும், தமிழர் இராணுவத்திற்கும் இடையில் போர் நடைபெறுகின்றது.

இப்போர் சிங்கள தேசத்தின் மண்ணில் நிகழவில்லை,

தமிழீழ மண்ணிலேயே நடைபெறுகின்றது.

தமிழீழம் சிங்களப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

சிங்களதேசத்தின் இராணுவம் தனது முப்படைகளையும் பயன்படுத்தி தமிழர்களின் தாயகமான- தமிழீழத்தின்--மீது மும்முனைத்தாக்குதலைநடாத்தி எமது மக்களைக் கொன்றொழித்துக் கொண்டிருக்கின்றது.

இவ் இனஅழிப்பைத் தடுத்து நிறுத்தி எமது மண்ணை சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிப்பதற்காக தமிழர் இராணுவம் அளப்பரிய தியாகங்களைப் புரிந்து போராடிக் கொண்டிருக்கின்றது.

போர் என்பது மிகப்பெரிய பொருட்செலவில் நடாத்தப்படுவது. போர் ஆயுதங்களின் பிரமாண்டமான செலவுடன் விடுதலை இராணுவத்தைப் பராமரிக்கவும் பெரிய அளவில் நிதி தேவைப்படுகின்றது.

அடக்குமுறையாளனின் கருவியாக இருந்து செயற்படும் அரச இராணுவத்திற்கு பொருட் செலவென்பது பெரிய பிரச்சனையாக இருக்காது. அதை அரசாங்கமே பார்த்துக் கொள்ளும்.

- O அதற்காக அன்னிய நாடுகளிடமிருந்துகடன் வாங்கும்
- O அல்லது அன்னிய சக்திகளுக்கு நாட்டை அடைவு வைத்து நிதியைப் பெறமுனையும்
- O அல்லது சொந்த நாட்டு மக்களின் உழைப்பையே உறிஞ்சும்
- O அல்லது மேற்கூறியஅனைத்தையும் செய்யும்.

ஆனால், உண்மையானதொரு விடுதலைஇராணுவம் தனது நிதித்தேவைகளை மேற்குறித்த வகையில் பெறுவதில்லை.

அன்னிய சக்தி ஒன்று எமது மக்களின் விடுதலையை விரும்பி ஏற்று பொருள் உதவி புரியும் என எதிர்பார்ப்பது மடைமைத்தனம். அவ்விதம் வரமுனையும் உதவிகளும்கூட ஒரு துஸ்டநோக்கத்தைக் கொண்டதாகவே இருக்கும். இது வரலாறு கற்றுத்தந்தபாடம்.

எமது மக்களின் விடுதலையை எப்பாடுபட்டாவது நாம்தான் பெறவேண்டும்.

ஒரு விடுதலை இராணுவத்தின் தேவைகள் அனைத்தையும் மக்கள்தான் ஈடுசெய்ய வேண்டும்.

ஆக்கிரமிப்புப்படைகளுக் கெதிராக விடுதலைப் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கும் ஒரு இனம் அல்லது ஒரு தேசம் அந்த விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக தனது வளங்கள் - பலங்கள் அனைத்தையுமே போராட்டத்திற்குத் தாரைவார்க்கத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் ஆக்கிரமிப்பை முறியடிக்க முடியும்.

தமிழீழம் அனைத்து வளங்களையும் கொண்ட ஒரு நாடு. மனிதவளம், மூளைவளம், தொழில் நுட்பவளம், பொருளாதாரவளம், இயந்திரவளம்--- என எமது வளங்கள் நீண்டுசெல்லும்.

- O பொருளாதார பலமுள்ளவர்கள் போராட்டத்திற்காக நிதியை வாரிவழங்க வேண்டும்.
- O தொழில்நுட்பவளமும், மூளைவளமும் உள்ளவர்கள் தங்களது ஆற்றலை போராட்டத்திற்கு வளங்க வேண்டும்.
- O வாகனங்கள், மற்றும் இயந்திர சாதனங்களின் சொந்தக்காரர்கள்தங்களது வாகனங்களை அல்லது இயந்திரசாதனங்களை போராட்டத்திற்கு வழங்க வேண்டும்.
- O இத்தகைய வளங்களுடன் தமிழீழப் பிரசைகள் அனைவரினதும் உடல் உழைப்பும் போராட்டத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

இதனுடைய அர்த்தம் தேவையானவற்றைவைத்துக்கொண்டு தேவைக்கு மிஞ்சியிருப்பதை போராட்டத்திற்கு கொடுத்தல் என்பதல்ல.

மாறாக, தங்களது தேவைகளைச் சுருக்கிக் கொண்டு அனைத்தையுமே போராட்டத்திற்காக அர்ப்பணித்தல் என்பதையே குறித்து நிற்கின்றது.

தமிழீழத்தின் குடிமக்களாகிய எமது மக்களிடமிருந்து நாம் கேட்பது; போராட்டத்திற்காக பொருளை அர்ப்பணிக்கத் தயாராக இருங்கள், உங்களது சேமிப்புக்களை அர்ப்பணிக்கத் தயாராக இருங்கள், உடல்உழைப்பை அர்ப்பணிக்கத் தயாராக இருங்கள், அத்துடன் உங்களது உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக இருங்கள்.

ஏனென்றால், இது எமது எதிர்கால சந்ததியின் சுதந்திரமான, வளமான வாழ்க்கைக்கான ஒரு போராட்டம். கேட்டால்தான் கொடுப்போம் என்ற அன்னியமனோபாவத்தைக் கைவிட்டு தேடிச்சென்று கொடுங்கள். இதை ஒரு நிர்ப்பந்தமாகவும், இடைஞ்சலாகவும் கருதும் மனோநிலையை உதறித்தள்ளி விடுங்கள். இவைகளெல்லாம் எமது விடுதலைப் போராட்டத்தின் தவிர்க்க முடியாத தேவைகள். இத்தேவைகளைத் தமிழீழ மக்கள்தான் நிறைவேற்ற வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்ளுங்கள் — மற்றவர்களுக்கும் புரியவையுங்கள்.

இப்போராட்டத்திலிருந்து எவருமே ஒதுக்கி வாழ முனையாதிர்கள். இதில் பங்கெடுக்கவேண்டியது தமிழீழக்குடிமக்கள் அனைவரினதும் கடமையாகும்.

இன்று, இக்கடமையானது உங்கள் முன் இருப்பதையிட்டுசஞ்சலமடையாதிர்கள். பெருமைப்படுங்கள்.

இது உங்களுக்கு மட்டும்தான் கிடைக்கும் ஒரு அரியசந்தர்ப்பம். எமது மூத்த சந்ததிக்கோ அல்லது, எமது அடுத்த அடுத்த சந்ததிக்கோ கிடைக்காத ஒரு அரிய வாய்ப்பு தற்போது எமது சந்ததிக்குக் கிடைத்துள்ளது.

அது என்னவெனில் எமது இனத்தின் விடுதலையை இரத்தம்சிந்தி, அர்ப்பணிப்புக்களுடன் போராடி, பெற்றுக்கொடுக்கும் ஒரு வாய்ப்பு.

எமது தேசத்தை ஆக்கிரமிப்பாளனிடமிருந்து மீட்டுக் கொடுக்கும் வாய்ப்பு.

இதற்காக தமிழீழத்தின் அனைத்து வளங்களும்- பலங்களும் பயன்படுத்தப்படவேண்டும்.

தமிழீழத்தில் இருக்கும் அனைத்து உயிர்களும், அனைத்துப் பொருட்களும், அனைத்து வளங்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கே சொந்தமானது.

இத்தகையவளங்களும்-பலங்களும்தான் வளர்ந்து வரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றியடையச் செய்யும்.

# தமிழீழத் தனியரசை நோக்கி....

**சிங்கள அரசு தமிழீழ மக்களுக்கு எதிராக முழு அளவிலான ஒரு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதாலும், இந்த யுத்தமானது இன ஒழிப்புத் திட்டமாக பேயுருவம் பெற்றிருப்பதாலும் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது அரசியல் பாதை நோக்கி புதிய கொள்கைத் திட்டம் ஒன்றை பிரகடனப் படுத்தியிருக்கிறது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டவரலாற்றில் ஒரு முக்கிய திருப்பமாக அமையப்பெறும் இந்தப் புதிய கொள்கைத் திட்டத்தை இக் கட்டுரை விரிவாக ஆராய்கிறது.**

சென்ற ஆண்டு வைகாசி மாத ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் பிரேமதாசா அரசுக்கும் மத்தியில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. பதினைந்து ஆண்டுகால ஆயுதப் போராட்ட வரலாற்றில் முதற் தடவையாக இந்த சந்திப்பு நிகழ்ந்தது. இந்திய இராணுவத் தலையீட்டால் வடகிழக்கில் தொடர்ந்த யுத்த பயங்கரமும், தமிழின அழிப்பும், தென்னிலங்கையில் தாண்டவமாடிய அரச எதிர்ப்புக் கிளர்ச்சிகளும் இந்தப் பேச்சுகளுக்கு தூண்டுதலாக அமைந்தன. அந்நிய ஏகாதிபத்திய இராணுவத்தை வெளியேற்றிவிட வேண்டும் என்றஒத்திசைவான கருத்தில் புலிகள் - அரசு பேச்சு சினேகபூர்வமாக தொடர்ந்தது. இந்தக் கூட்டு ராஜதந்திர முயற்சியாலும், விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த ஆயுதப்போராட்டத்தாலும் இறுதியில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழ மண்ணிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது.

இந்திய இராணுவ வெளியேற்றத்தை அடுத்து இரண்டாவது கட்டமாக நிகழ்ந்த பேச்சுக்களின்போது மாகாண சபை அமைப்பை ஒரு இடைக்கால நிர்வாக ஒழுங்காக ஏற்க விடுதலைப் புலிகள் இணங்கினர்.

எடுத்துவிளக்கி, மாகாண சபைத் திட்டம் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யத் தவறிவிட்டதென பிரபாகரன் குறிப்பிட்டுக்காட்டினார். பிரபாகரனின் விளக்கங்களை ராஜீவ் காந்தி ஏற்றுக்கொண்டபோதும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில் மட்டும் அவசரம் காட்டினாரேயன்றி தமிழ் பேசும் மக்களின் நலனில் சிரத்தை காட்டவில்லை. இந்திய அரசின் இந்த தவறான அணுகுமுறை காரணமாகவே இந்தியாவுக்கும் புலிகளுக்கும் மத்தியில் முரண்பாடு முற்றி பின்னர் மோதலாக வெடித்தது. யுத்த காலத்தின்போது மாகாண சபைத் திட்டத்தை செயற்படுத்த இந்திய அரசு முனைந்தது. மோசடியான தேர்தலை நடாத்தி, தனது அடிவருடிகளை பதவியில் ஏற்றியது. இறுதியில், மாகாண சபையில் எவ்வித ஆட்சியதிகாரங்களும் இல்லை என்பதை பகிரங்கமாக ஒத்துக்கொண்ட ராஜீவ் அரசு அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்திவந்தது.

## புலிகள் — அரசு பேச்சில் விரிசல்கள்

ஒற்றையாட்சி யாப்-பின் கீழ் மாகாண சபையை ஒரு நிரந்தரத் தீர்வுத் திட்

சேபித்து விடுதலைப் புலிகள் சர்வகட்சி மாநாட்டிலிருந்து முற்றாக விலகிக்கொண்டனர். ஒரு வருடத்திற்கு மேலாக பேச்சுவார்த்தைகள் முடிவின்றி இழுபட்டுச் சென்றுகொண்டிருந்த அதேவேளை, தமிழீழத்தில் அரசியல் சூன்ய நிலை நீடித்ததால் அரசின் நோக்கில் புலிகளுக்கு சந்தேகம் எழுந்தது. தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் நிர்வாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதை அரசு விரும்பவில்லை. இதனால் புலிகளின் நிபந்தனைகளை

தட்டிக்கழித்தது. இதே சமயம், தமிழீழத்தில் சிங்கள இராணுவத்தினதும், பொலீஸாரதும்கெடுபிடிகளும் அத்துமீறல்களும் அதிகரிக்கத் தொடங்கின. முகாம்களுக்குள் முடங்கியிருக்க விரும்பாத இராணுவம் புலிகளின் காவல் அரண்களை உடைத்துக் கொண்டு வெளியேற முனைந்தது. இதனால் ஏற்பட்ட மோதல்கள் போராக வெடித்தது. போர் நிறுத்தத்திற்கு புலிகள் இணங்கியபோதும் சிங்கள ஆயுதப் படைகள் தாக்குதல்களைத் தொடர்ந்



நிறைவேற்றாமல் காலத்தைக் கடத்திவந்தது.

தமிழீழத்தில் அரசியல் வெறுமை நிலையை திட்டமிட்டு நீடித்துவந்த பிரேமதாசா அரசு, தனது ஆட்சி அதிகாரத்தை தமிழ்ப் பகுதிகளில் பலப்படுத்த முனைந்தது. விடுதலைப்புலிகள் இயக்கத்

தன. தமிழீழம் எங்கும் போர் விரிவடைந்தது.

## மீண்டும் தமிழ் இன அழிப்பு

இம்முறை யுத்தம் என்றுமில்லாதவாறு தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்ட முழு

அதாவது.

1) சிங்கள ஆளும்வர்க்கத்தின் பேரினவாதக் கொள்கையிலும் அணுகுமுறையிலும் எவ்வித மாற்றமும் நிகழவில்லை. நிகழப்போவதுமில்லை.

2) சிங்கள அரசானது தமிழ் மக்களை தனது பிரசைகளாகவோ அல்லது இந்நாட்டின் குடிமக்களாகவோ கருதவில்லை. மாற்றாக, அந்நியர்களாகவும், வேண்டாதவர்களாகவும், அழிக்கப்படவேண்டிய எதிரிகளாகவுமே கருதுகிறது.

3) ஒற்றையாட்சியின்கீழ் தமிழரும் சிங்களவரும் ஒன்றுபட்டு வாழ வகைசெய்யும் அரசியல் தீர்வுத் திட்டங்கள் இனி நடைமுறை சாத்தியம் ஆகப்போவதில்லை. இதற்கான காலம் கடந்துவிட்டது.

4) எதிர்காலத்தைப் பொறுத்தவரை, தமிழ் மக்கள் தமது சொந்த தாய்மண்ணில் சுயநிர்ணய உரிமையும் இறைமையும் உடையவர்களாக, பரிபூரண மானிலசுயாட்சியுடன் வாழ வேண்டும். அல்லாது போனால் பிரதேச ரீதியாகப் பிரிந்து, தமிழீழத் தனியரசை அமைத்து சுதந்திர தேசத்தவராய் வாழ வேண்டும்.

இந்த எதார்த்த அரசியல் உண்மைகளின் அடிப்படையில் தான் விடுதலைப் புலிகளின் புதிய கொள்கைத் திட்டம் நெறிக்கப்பட்டிருக்கிறது.

*இதன் பிரகாரம்,*

*சிறீலங்கா அரசின் ஒற்றையாட்சி யாப்பை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர். சிறீலங்காவின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின்கீழ் தமிழர் தேசிய பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணமுடியாது என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.*

# புலிகளின் புதிய பிரகடனம்

## இந்திய — புலிகள் போர்

மாகாண சபை அமைப்பு எவ்வகையிலும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் ஒரு தீர்வுத் திட்டமாக அமையவில்லை என்பதுதான் புலிகளின் நிலைப்பாடு. இந்தத் திட்டம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்கீழ் அறிவிக்கப்பட்டபொழுது அதனை புலிகள் இயக்கம் எதிர்த்தது. ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னராக எமது தலைவர் திரு. வே.பிரபாகரன் முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை டில்லியில் சந்தித்த பொழுது மாகாண சபை அமைப்பிலுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டினார். தமிழ் மண்ணையும் மக்களையும் பாதுகாக்கும் எந்தவித உருப்படியான அதிகாரங்களும் மாகாண சபை அமைப்பில் இருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டி, சிறீலங்கா ஜனாதிபதிக்கும், மத்திய அரசுக்கும், சிங்களப் பெரும்பான்மை பாராளுமன்றத்திற்கும் ஏகபோக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதாக

டமாக முன்வைப்பதே பிரேமதாசா அரசின் நோக்கமாக இருந்தது.

மாகாண சபையை ஒரு நிரந்தரத் தீர்வாக ஏற்க முடியாதென கொழும்பு பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் பகிரங்கமாக அறிவித்தனர். மாகாண சபையை ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பாக ஏற்று, தேர்தலின்பின்னர் தமிழரின் தேசிய பிரச்சனை குறித்து பேச்சுக்களைத் தொடரலாம் என்று புலிகள் வலியுறுத்தினர். அதே சமயம் மாகாண சபைத் தேர்தலில் பங்குகொள்வதாயின் அரசியல் அமைப்பின் ஆறாவது சட்டத் திருத்தம் நீக்கப்பட வேண்டுமென்றும் எமது இயக்கம் முன்நிபந்தனை விதித்தது. இந்த முரண்பாடான நிலைப்பாடு காரணமாக புலிகள் - அரசு பேச்சில் விரிசல்கள் விழுந்தன. புலிகளுடனான பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை தவிர்க்கும் நோக்கில் அரசு ஈ. பி. ஆர். எல். எவ்வை பேச்சுக்கு அழைத்தது. சர்வ கட்சி மாநாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தது. இதனை ஆட்

தின் இராணுவ அமைப்பைக் கலைத்து, சிங்கள இராணுவ மேலாதிக்கத்தை தமிழ்ப் பிரதேசத்தில் கட்டிவளர்க்க திட்டம் தீட்டியது. இத் திட்டத்தின் அடிப்படையில் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என வலியுறுத்திவந்த அரசு சிங்கள ஆயுதப் படையினரின் நிலைகளை வடகிழக்கில் விஸ்தரித்து வந்தது. அதேவேளை, கிழக்கிலங்கையில் சிங்களக் குடியேற்றத்தையும் தீவிரப்படுத்தியது. தமிழரின் தாயகப் பூமியில் சிங்கள இராணுவ முகாம்கள் குறைக்கப்பட வேண்டுமென்றும் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டுமென்றும் கொழும்புப் பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் வலியுறுத்திவந்தனர். திருக்கோணமலை மாவட்டத்தில் மட்டும் 60க்கு மேற்பட்ட சிங்கள இராணுவ முகாம்கள் இயங்கிவருவதாக சுட்டிக்காட்டிய புலிகள், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் சிங்கள இராணுவ வல்லாதிக்கம் தலைதூக்குவதை கடுமையாக எதிர்த்தனர். புலிகளின் ஆட்சேபனைகளை சிங்கள அரசு

அளவிலான யுத்தமாக உருவெடுத்திருக்கிறது. அதாவது, இந்த யுத்தம் தமிழ் இன ஒழிப்பை இலக்காகக் கொண்டிருக்கிறது. போர் ஆரம்பமாகி இரு வாரங்களுக்குள் மட்டும் கிழக்கிலங்கையில் இரண்டாயிரம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பல லட்சம் மக்கள் தங்கள் சொந்தக் கிராமங்களிலிருந்து விரட்டப்பட்டு அகதிகளாக்கப்பட்டிருக்கின்றனர். குடிமனைகள் மீது திட்டமிட்டு நடாத்தப் பட்டுவரும் விமானக் குண்டு வீச்சுக்கள், ஹெலித்தாக்குதல் பீரங்கி 'செல' வீச்சுக்கள், தமிழ் பகுதிகளுக்கு ஊடுருவும் ஆயுதப்படைகளின் மிருகத்தனமான வெறியாட்டம், அரசால் திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் - இவை அனைத்தும் தமிழரை இனரீதியாக ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற நாசகார நோக்குடன் நடாத்தப்படுகிறது. இன ஒழிப்பை நோக்காகக் கொண்ட இந்த அரச பயங்கரவாத யுத்தத்திலிருந்து நாம் சில உண்மைகளை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## தமிழர் விரோத அரசியல் யாப்புகள்

1972ம் ஆண்டு சட்டமாக்கப்பட்ட புதிய குடியரசு யாப்பும், பின்னர் 1978ம் ஆண்டு ஜெயவர்த்தனா அரசால் கொண்டு வரப்பட்ட புதிய அரசியல் அமைப்புத்திட்டமும் தமிழ் மக்களின் நலன்களையும் அபிலாசைகளையும் முற்றாகப்புறக்கணித்தன. தமிழ் மக்களது பிரதிநிதிகளின் ஒப்புதலின்றி, ஒரு தலைப் பட்சமாக, சிங்களப் பெரும்பான்மை மக்களின் நலன்களையும், சிங்களப் பேரினவாத மேலாண்மையையும் நிலைநிறுத்தும் இந்த யாப்புகள் ஈழத் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட மாபெரும் வரலாற்று அநீதியின் சின்னங்களாகத் திகழ்கின்றன.

சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்திற்கும் ஏகபோக அந்தஸ்து வழங்கி, முழு இலங்கைத் தீவையும், சிங்கள தேசமாகச் சித்தரித்து, ''பிரதேச ஒருமைப்பாடு'' என்ற

ஒற்றைத் தேசியக் கோட்பாட்டை வலியுறுத்தும் இந்த யாப்பு, சிங்கள இனத்தின் தேசியத்திற்கு மகத்தான முக்கியத்துவம் வழங்குகிறது. தமிழரின் தேசிய தனித்துவம், தமிழ்த் தாயகப் பூமி, தமிழ்க் கலாச்சாரம் என்பவற்றிற்கு இந்த அரசியலமைப்பில் எவ்வித அந்தஸ்தும் இல்லை. அங்கீகாரமும் இல்லை. சிங்களதேசமாகிய சிறீலங்காவில் வதியும் பல்வேறு சிறுபான்மைக் குழுக்களில் தமிழரும் ஒரு சிறு குழு என்ற ரீதியில் தமிழினத்தை சித்தரிக்கிறது இந்த யாப்பு.

**சிங்கள பேரினவாதத்தின் சட்டவடிவமான இந்த ஒற்றையாட்சி யாப்பின்கீழ் தமிழீழ மக்களின் தேசிய பிரச்சனையை அணுகவும் முடியாது; தீர்க்கவும் முடியாது.**

தமிழீழ மக்கள் ஒரு தேசிய இனம், அவர்களது பிரச்சனை ஒரு தேசிய இனப்பிரச்சனை, என்ற அடிப்படையான எதார்த்த அரசியல் நிலையைக்கூட இந்தயாப்பு ஒப்புக் கொள்ள மறுக்கிறது.

தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசியஇனம் என்ற ரீதியில் அவர்களுக்கு தேசிய சுயநிர்ணய உரிமை உண்டு. அதாவது, தேவை ஏற்படின், பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமை தமிழருக்கு உண்டு, என்ற அரசியல் உரிமைக்கு ஆப்பு வைப்பது போல இந்த யாப்பின் ஆறாவது சட்டத்திருத்தம் அமையப் பெற்றிருக்கிறது.

எனவேதான், சிறீலங்காவின் ஒற்றையாட்சி யாப்புவின் கீழ் தமிழீழ மக்களின்தேசியஇனப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு காண முடியாது என்பதை எமது விடுதலை இயக்கம் அன்றும் இன்றும் வலியுறுத்திவருகிறது.

மாகாண சபைத் திட்டம் சிறீலங்காவ்ன் ஒற்றையாட்சி யாப்புவின் கட்டமைப்பின் கீழ் அமைகிறது. எனவே, இந்த மாகாண சபைத்திட்டம் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக அமையப்போவதில்லை. மாகாண சபைக்கு வழங்கப்போவதாக கூறப்படும் அரசியல் பரவலாக்க அதிகாரங்கள் எதுவும் ஒற்றையாட்சி யாப்பின் சட்ட அதிகார வரம்புகளை மீறுவதாக அமையாது. எனவே, மாகாணசபைத் திட்ட வடிவமைப்பிற்குள் தமிழரின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முடியாது. இதனை ஒரு தீர்வுத்திட்டமாகவும் நாம் ஏற்க முடியாது.

மாகாண சபை அமைப்பை ஒரு இடைக்கால நிர்வாக ஒழுங்காக ஏற்பதற்கு புலிகள் இயக்கம் முன்பு இணங்கியது என்பதை எமது மக்கள் அறிவர். அன்று நிலவிய சமாதான சூழலில், ஒரு சனநாயக தேர்தலைசந்தித்து, தமிழீழ மக்களின் பரந்துபட்ட ஆதரவு எமக்குண்டு என்பதை சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டவும், மக்களுக்கான நிவாரண புனர்வாழ்வு வேலைகளை துரிதப்படுத்தவும் மாகாணசபையை ஒரு இடைக்கால நிர்வாகக் கருவியாக நாம் பயன் படுத்த தீர்மானித்தோம். அதுவும், சிங்கள அரசு ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்கி, சிங்களக் குடியேற்றத்தை நிறுத்தி, சிங்கள இராணுவ ஆதிக்கத்தை தமிழ்ப் பகுதிகளில் குறைத்து, மாகாண தமிழ்ப் பொலீஸ் அமைப்பை உருவாக்கி, தமிழீழ மக்கள்மீது நல்லெண்ண சமிக்கைகளை காட்டினால் மட்டுமே நாம் அரசியல் நீரோட்டத்தில் இறங்கத் தீர்மானித்தோம்.

## தமிழீழத்தனியரசு

ஆனால்,இன்றையஎதார்த்த புறநிலைகள் வேறு. எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்டுள்ள யுத்தத்தின் தன்மையும், அதனால் எழுந்துள்ள பூதாகரமான பிரச்சனைகளும் சிங்கள அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளும் எமது அணுகுமுறையில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது, சிறீலங்காவின் ஒற்றையாட்சியின்கீழ் எவ்விதஇடைக்கால தீர்வையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதுதான்.

**சிறீலங்கா அரசின் ஒற்றையாட்சி யாப்பை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர். சிறீலங்காவின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின்கீழ் தமிழர் தேசிய பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணமுடியாது என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.**

பிரேமதாசா அரசு தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு உண்மையில் தீர்வு காண விரும்பினால்,

முதலில்,ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை மாற்றியமைக்க முன்வர வேண்டும்.

இரண்டாவதாக,தமிழீழ மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து, அவர்களது பிரச்சனையை ஒரு தேசிய இனப் பிரச்சனையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, வடகிழக்கு மாகாணத்தைக் கொண்ட தமிழீழப் பிரதேசத்தை தமிழீழ மக்களின் தாயகப் பூமியாக அங்கீகரித்து, அதன் பிரதேச ஒருமைப்பாட்டை கௌரவிக்கவேண்டும்.

நான்காவதாக, தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

தமிழீழ மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து, அவர்களது தாயகப்பூமியின் பூகோள ஒருமைப்பாட்டைகௌரவித்து, அவர்களது தேசிய சுயநிர்ணய உரிமையைஏற்று, பூரணமான அரசியல் அதிகாரங்களுடைய மானில சுயாட்சித் திட்டம் ஒன்றை சிங்கள அரசு முன்வைக்குமானால் அதனை விடுதலைப் புலிகள் இயக்கம் பரிசிலனை செய்யத் தயாராக இருக்கிறது.

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனை எவ்வித தீர்வுமின்றி நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலாக இழுபட்டு வருகிறது. நாகரீகமான முறையில் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க சிங்கள ஆளும் வர்க்கம் அன்றும் இன்றும் தயாராக இல்லை. சிங்கள வல்லாதிக்கத்தை திணிக்கும் ஒற்றையாட்சி யாப்புகளை சட்டமாக்கி, தமிழீழ மக்களை இரண்டாம் தரப் பிரசைகளாக, அந்நிய குடிமக்களாக அடக்கி வைத்திருக்கவே சிங்களப் பேரினவாதிகள் விரும்புகின்றனர். ஒற்றையாட்சி முறையை மாற்றியமைத்து சமஷ்டியமைப்பு வடிவத்தில் தமிழர்களுக்கு மானில சுயாட்சி வழங்க எந்தவொரு சிங்கள அரசியல் கட்சியும் தயாராக இல்லை. நாற்பது ஆண்டுகால கசப்பான வரலாற்று அனுபவத்தில் நாம் கண்ட உண்மைஇது.இந்த,இனவாத வரலாற்றுப்போக்கிற்கு பிரேமதாசா அரசும் விதிவிலக்கானதல்ல. ஒற்றையாட்சி முறையை மாற்றியமைக்க பிரேமதாசா அரசு தயாராக இல்லை. பிரேமதாசாவின் பேச்சுக்களும் பிரகடனங்களும் இந்த நிலைப்பாட்டை தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இதன் காரணமாகவே, பிரேமதாசா அரசும் இராணுவத் தீர்வை விரும்புகிறது.

தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உருப்படியான, நிரந்தரமான தீர்வுத் திட்டம் எதனையும் முன் வைக்கமறுத்து, பிரேமதாசா அரசு இன ஒழிப்பு யுத்தத்தை தொடருமானால் நாம் என்ன செய்வது? எமக்குள்ள மாற்று வழி என்ன?

எம்மை அழிக்க முனையும் சிங்கள இனவாத அரக்கனை எதிர்த்து நின்று போராடுவதைத்தவிர எமக்கு வேறு வழி இல்லை.

எமது உரிமைகளை நாமே போராடி வென்றெடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை?

தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்து தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

**சிங்கள அரசானது இராணுவத் தீர்வை கடைப்பிடித்து, இன ஒழிப்பு யுத்தத்தை தொடர்வதன் மூலம் தமிழீழத் தனியரசு உதயமாகும் வரலாற்றுப் புற நிலைகளை உருவாக்கி வருகிறது.**



*பயணம் தொடரும்! பயணம் தொடரும்!!*
*பாதைகள் நீண்ட பொழுதும்;*
*இவர்களின் பயணம் தொடரும்!*

*தோள்களில் தங்கள் தோழனைச் சுமந்து,*
*புலரும் பொழுதில் பயணம் தொடரும்.*
*நெஞ்சில் விடுதலை நெருப்பைச் சுமந்து,*
*நீண்ட வழியில் சுவடுகள் பதியும்.*
*எதிரே தெரியும் எதிரியின் பாசறை*
*எரியும் வரையும் பயணம் தொடரும்.*

*ஏந்தும் தோள்களில் எத்தனை பெருமை.*
*இருக்கும் வீரனில் எத்தனை உறுதி.*
*கனவுகள் சுமந்த இவர்களின் வழியில்*
*கவலைகள் ஏதும் வருவதே இல்லை.*
*வெற்றியின் எல்லைகள் 'கிட்டு'ம் வரைக்கும்,*
*வீரர்கள் ஓய்ந்து விடுவதும் இல்லை.*

*காற்றும், மழையும் வரலாம்; எனினும்*
*கால்கள் நடக்கும், தோள்கள் சுமக்கும்*
*வீரனைச் சுமக்கும் வீரரின் நெஞ்சில்*
*விடுதலை உணர்வே விளையும்! விளையும்!!*


# இரத்தக் கறைபடிந்த நாட்கள்

13 . 06 . 1990

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒருபிள்ளையார் கோயிலைக் குண்டு வைத்துத் தகர்த்த சிங்களப் படையினர், அக் கோயிலைச் சுற்றியுள்ள பகுதியிலும், அம்பாறை மத்திய முகாமைச் (Central camp) சுற்றியுள்ள பகுதியிலும் 100ற்கும் அதிகமான தமிழ் மக்களை வெட்டிக் கொலை செய்தனர்.

15 . 06 . 1990

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஜெயபுர என்னும் இடத்தில் பஸ் ஒன்றில் சென்று கொண்டிருந்த 13தமிழ்மக்களை சிங்கள இராணுவத்தினர் வழிமறித்துக் கொலைசெய்தனர்.



அம்பாறையில்......

16 . 06 . 1990

கடந்த 3 நாட்களாக திருக்கோணமலை நகரப்பகுதியில் 100ற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை சிங்கள இராணுவத்தினரும், சிங்களக் காடையர்களுமாகச் சேர்ந்து வெட்டிக் கொலை செய்தனர்.

18 . 06 . 1990

திருக்கோணமலையின் எல்லைக் கிராமங்களான கப்பற்துறை, வெள்ளைமணல், கம்பர்மலை ஆகிய ஊர்களின் மீது சிங்கள முப்படைகளும் கடந்த 3 தினங்களாக நிகழ்த்திய தாக்குதலில் 40ற்கும் அதிகமான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

18 . 06 . 1990

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சீனன்குடா என்னும் இடத்தில் 40 தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.

19 . 06 . 1990

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஊற்றுச்சேனை என்னும் இடத்தில் 9 தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

20 . 06 . 1990

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கொக்குவில் என்ற இடத்தில் உலங்குவானூர்தி ஒன்று குண்டு வீசித்தாக்கிய போது ஒரு வீட்டிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5பேர் உட்பட 8 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

21 . 06 . 1990

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சீனன்குடா என்ற இடத்தில் சிங்கள இராணுவத்தினர் 14 தமிழ் மக்களை எரிகின்ற டயரில் உயிருடன்போட்டுக் கொலை செய்தனர்.

21 . 06 . 1990

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் என்ற இடத்தில் 13 தமிழ் மக்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

22 . 06 . 1990

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காரைதீவு எனும் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14பேர் உட்பட 35 தமிழ் மக்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். மேலும், 4 தமிழர்களை வெட்டிக் கொன்று கிணற்றுக்குள் போட்டனர்.

22 . 06 . 1990

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை என்னும் இடத்தில், சிங்கள இராணுவத்தினர் 30ற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை சுட்டுக் கொன்றனர். மேலும்,3 தமிழர்களை எரிகின்ற டயரில் உயிருடன் போட்டுக் கொலை செய்தனர்.



திருக்கோணமலையில்......

23 . 06 . 1990

திருக்கோணமலைமாவட்டத்திலுள்ள 3ம்கட்டை, 6ம்கட்டை, சாம்பல்தீவு ஆகிய ஊர்களில் சிங்களப் படைகளினாலும், சிங்களக்காடையர்களினாலும் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ் மக்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

23 . 06 . 1990

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள நிலாவெளி எனும் ஊரில், செல்வம்மில்லில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த தமிழ்மக்கள் மீது சிங்களவான்படை நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 35 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

25 . 06 . 1990

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை என்ற கிராமத்தில் ஏறக்குறைய 85 தமிழ் மக்களை சிங்களப் படையினர் வெட்டியும், சுட்டும் கொலை செய்தனர்.

26 . 06 . 1990

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை என்ற இடத்தில் முஸ்லிம் காடையர்களும் சிங்களக் காடையர்களும், சேர்ந்து 75ற்கும் அதிகமான தமிழ் மக்களை உயிருடன் டயரில் போட்டு எரித்துக் கொலை செய்தனர்.

30 . 06 . 1990

அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனை என்னும் கிராமத்தில்சிங்களஇராணுவத்தினர் 84 தமிழ் இளைஞர்களை சுற்றிவளைத்துக் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்று சுட்டுக் கொலை செய்தனர்.

01 . 07 . 1990

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை என்ற கிராமத்தில் 57 தமிழ் மக்களை சிங்களக் காடையர்கள் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

05 . 07 . 1990

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள, மூதூர்ப் பிரதேசத்தில் சிங்களப் படைகள் விமானத்திலிருந்தும், உலங்குவானூர்திகளிலிருந்தும் (ஹெலி) நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 30ற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40ற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

06 . 07 . 1990

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள மட்டக்குளி, நல்லூர் ஆகிய இடங்களில் 10 தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிய சிங்கள இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும், அப் பெண்களுடன் சேர்த்து 30 தமிழ் மக்களை கழுத்தில்வெட்டிப் படுகொலை செய்தனர்.

07 . 07 . 1990

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் என்ற இடத்தில் 12 முஸ்லிம் மக்கள் உட்பட 24 தமிழர்களை முஸ்லிம காடையர்களும், சிங்களக் காடையர்களுமாகச் சேர்ந்து சுட்டுக்கொலை செய்து விட்டு, டயர் போட்டு எரித்தனர்.

07-10 . 07 . 1990

இத் திகதிகளுக்கு உட்பட்ட நாட்களில் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா என்ற இடத்தில் 8 தமிழ் மக்களை சிங்களக் காடையர்களும், முஸ்லிம் காடையர்களுமாகச் சேர்ந்து உயிருடன் டயர்போட்டு எரித்துக் கொலை செய்தனர்.



மட்டக்களப்பில்.........

07-10 . 07 . 1990

இத்திகதிகளுக்கு உட்பட்ட நாட்களில் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ளவீரமாநகர் எனும் கிராமத்தில் சிங்களக் காடையர்களினால், 4,5 வயதுக் குழந்தைகள் உட்பட 35 தமிழ்மக்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

10 . 07 . 1990

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை என்ற இடத்தில் கறுப்பு உடை அணிந்த சிங்களக் கொலைக்கும்பலினாலும், முஸ்லிம் காடையர்களினாலும் 31 தமிழ் மக்கள் வெட்டிக் கொல்லப்பட்ட பின், தீ வைத்து எரிக்கப்பட்டனர்.

11 . 07 . 1990

வடபகுதியிலிருந்து தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு தமிழகம் சென்று கொண்டிருந்த படகு மீது சிங்களக் கடற்படையினர் பீரங்கியால் தாக்கியபோது 21 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

12 . 07 . 1990

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளி என்ற இடத்தில் சிங்களப்படையினர் 35 தமிழ் மக்களைக் கைது செய்து, பின்னர் சுட்டுக் கொலை செய்தனர்.

13-14 . 07 . 1990

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளி எனும் ஊரில் அகதி முகாம் ஒன்றிலிருந்து சிங்களப்படையினரால் கைதுசெய்யப்பட்ட 14 தமிழ்மக்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். இவர்களில் 2 பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டபின் கொலைசெய்யப்பட்டனர்.

14 . 07 . 1990

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாடறுத்தமுனை என்ற கிராமத்தில் சிங்களப்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த 28 தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டு, எரிக்கப்பட்டனர்.

14 . 07 . 1990

வட பகுதியில் இருந்து தமிழகத்தின் இராமேஸ்வரம் நோக்கி அகதிகளாகச் சென்று கொண்டிருந்தவர்களின் படகு ஒன்றின் மீது சிங்களக் கடற்படையினர் நடாத்திய பீரங்கித் தாக்குதலில் 24 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள் யாழ்ப்பாணக் கரைகளில் ஒதுங்கின.

14 . 07 . 1990

யாழ்ப்பாணநகரத்தின்மீது சிங்கள வான்படையின் குண்டு வீச்சுத் தாக்குதலில் 5 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 6 பேர் காயமடைந்தனர்.

16 . 07 . 1990

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை, முனைக்காடு ஆகியகிராமங்கள் மீது சிங்கள வான்படையினர் "அவ்ரோ" விமானத்திலிருந்து மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 10 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 10 பேர் படுகாயமடைந்தனர்.

17 . 07 . 1990

மட்டக்களப்பு தொலைத்தொடர்பு திணைக்களத்துக்கு முன்னால் 9 தமிழ் மக்களின் உடல்கள் சிங்கள இராணுவத்தால் டயர் போட்டு எரிக்கப்பட்டன.

19 . 07 . 1990

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிந்து கருகிய நிலையில் 35 தமிழ் மக்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பழுகாமத்தில் 9 சடலங்களும், கோவில் போரைதீவில் 12 சடலங்களும் பெரியபோரைதீவில் 8சடலங்களும், வெள்ளாவெளியில் 5சடலங்களும், கற்சேனையில் ஒரு சடலமுமாக இம் 35 சடலங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

# ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்



தயாபரன்! அவ்வளவு நிறமற்ற மெலிந்த அழகான தோற்றம், அவனுக்கு இருபத்தைந்து வயது தான். ஆனாலும் எம்மண்ணின் விடுதலைக்காக நீண்ட நாட்கள் போராடியவன். இன்று தன் நினைவுகளை மட்டும் விதைத்து விட்டு...

வன்னி மண்ணில் ஒரு கிராமத்தில் அமைதியாக வெளி நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபாடு காட்டாமல் வாழ்ந்த தயாபரனை சுற்றி நடந்த சமூகத்தின் மாறுதல்கள் ஒரு போராளியாக உருவாக்கி இருந்தது, உண்மைதான்.....

இராசேந்திரங்குளம் -இங்கு தான் தயாபரன் பிறந்தான். இது வன்னியின் ஆதிக் கிராமங்களில் ஒன்று. அந்தக் குளத்தையும் அதன் கீழிருந்த வயல்களையும் நம்பி அங்கே மக்கள் காலங் காலமாக வாழ்ந்தார்கள். அது ஒரு எல்லைக் கிராமமும் ஆகும்.

அதன் அருகில் இன்னொரு தமிழ்க் கிராமமான பாவற்குளத்தில் மேலும் மேலும் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதே நேரம் பாவற்குளத்தின் உட்பக்கமாக இருந்ததால் ''உட்குளம்'' என அழைக்கப்பட்ட குளத்தை உலுக்குளம் என்ற பெயர் மாற்றத்தோடு சிங்களக் கிராமமாக உருவாக்கினார்கள். இனவெறி ஊட்டப்பட்ட புதிய சிங்களவர்களின் வருகையும் அவர்களது அடாவடித்தனங்களும் தமிழ் மக்களின் மனங்களில் அச்சத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தின. காலப் போக்கில் பாவற் குளத்திலிருந்தும் அதன் அயற்கிராமங்களிலிருந்தும் தமிழ் மக்கள், குடியேற்றப்பட்ட சிங்களக் காடையர்களினாலும், சிறிலங்கா படையினராலும் மிகக் கொடூரமான முறையில் விரட்டப்பட்டார்கள். அந் நிகழ்வு எதிர்பார்த்ததுதான். ஏனெனில் பாவற்குளமும் அதையொட்டிய பெரும் வயல் நிலங்களும் மிகவும் வளமானவை அத்தோடு அவை சிங்கள எல்லைகளோடு இணைந்திருந்தன. இந்தக் கிராமங்களின் இழப்புகளின்தொடர்ச்சியாக அடுத்தது இராசேந்திரங்குளமிருந்தது.

இவையெல்லாம் தயாபரனின் கண் முன்னாலேயே நடந்தது. தன்னுடைய அயற் கிராமங்கள் பறி போனதும், தனது மக்கள் படுகொலை செய்யப்படுவதும், அவனை ஒரு போராளியாக உருவாக்கி இருந்தது. 1984ஆம் ஆண்டுப் பகுதியில் அவன் தன்னை இயக்கத்தில்இணைத்துக் கொண்டான். புலிகளின் 6வது பயிற்சி முகாமில் பயிற்சியைப் பெற்றபின் வவுனியா மாவட்டத்தில் போராட்ட நடவடிக்கைகளில் இவன் பங்குபற்றத் தொடங்கினான். அங்கு போராட்டம் கருக்கட்டிய காலம், அங்கு வாழ்ந்த மக்களது உரிமைகளை அவர்களுக்கு வலியுறுத்தி அவர்களுக் கெதிராக பயன் படுத்தப்படும் வன்முறைக்கு எதிராக போராட மக்களை தயார்படுத்த வேண்டிய நிலை இருந்தது. அத்துடன் புதிய போராளிகளை இணைத்து இயக்கத்தைப்பலப் படுத்த வேண்டிய தேவையும் இருந்தது.

தயாபரன், போராட்டக் களத்தில் இறங்கியவுடன் முதலில் எமது விவசாயப் பண்ணைகளில் நின்றான், அதன் பின் சிறிய பயிற்சி முகாமொன்றிற்கு பொறுப்பாளனாக இருந்து புதிய போராளிகளை உருவாக்கினான். இந்த முகாமில் தான் தயாபரனின் திறமையும் ஆளுமையும் அடையாளங் காணப்பட்டது. இதன்பின்பு தாக்குதற் பிரிவொன்றிற்கு பொறுப்பாளனாக தயாபரன் நியமிக்கப்பட்டான்.

தமிழீழத்தின் எல்லைப்புற மாவட்டமான வவுனியா பரந்த பிரதேசத்தை உள்ளடக்கியது. எல்லையோரக் கிராமங்கள் சிங்களக் குடியேற்றங்களினால் பறிபோயிருந்தன. சிங்கள படை முகாம்கள் எங்கும் பரந்திருந்தன. அப்பகுதியில் எமது தாக்குதற் பிரிவொன்றின் நடவடிக்கைகள் இலகுவானதல்ல., மிகவும் சிரமமானது.

எங்கள் எல்லையோர கிராமங்களிலிருந்து சிங்களவர்களை அகற்றுவதற்காகவும் ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்காகவும்அவர்கள்எதிரிகளுடன் அடிக்கடி மோதவேண்டி இருந்தது. நீண்ட தூர நடைப் பயணங்கள், உணவற்று, நீரற்று - சில வேளைகளில் அவர்களின் தொடர்புகள் கூட அற்றுப் போய்விடும். ஆனால் அவர்கள் எங்கோ ஒரு மூலையில் எதிரிக் கெதிராகப் போராடிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் முகாமிற்கு திரும்பிய பின்பு தான் அவர்களுடைய பயணத்தின் கடினங்களும், சாதனைகளும் இழப்புக்களும் எங்களிற்குத் தெரியவரும். உண்மை தான் எங்களின் உயிர்த் தோழர்களில் ஒருவனை நாம் இழந்திருப்போம். இழப்பின் தாக்கம் எங்கள் வெற்றிகளை எல்லாம் மறைத்திருக்கும்.

இந்த நிலையில் தான்....

இந்திய - இலங்கை ஒப்பந்தமும், போர் ஒய்வு காலமும் ஏற்படுகிறது. அந்நேரத்தில் சமூக வ்ரோத சக்திகளெல்லாம் வவுனியா நகரை தம் தளமாக்கி நிலைபெற்றுக் கொள்கிறார்கள். ஒரு தினத்தில் புளொட்டினரால் கப்டன்தனம், கண்ணன், கைலை என புலிகளின் உறுப்பினர்கள் பலர் கொல்லப் படுகிறார்கள்.


நாங்கள் எம் தோழர்களின் இழப்புகளை தாங்க முடியாது தவிப்பதும் அதன் விளைவாக சினம் கொள்வதும் வழமைதான். அதுவும் ஆயுதமற்ற நிலையிலிருந்த எம்மீது ஒரு போரினை தொடுத்த புளொட்டினரை எம்மால் மன்னிக்க முடியவில்லை. இதன் விளைவாக கல்பாய்ந்த வெட்டையில் இருந்த புளொட்டினரின் முகாம் எம்மால் அழிக்கப்படுகிறது. இத்தாக்குதலின் ஒருபகுதிக்கு கப்டன், மகேந்தியும், தயாபரனும் தலைமை ஏற்று வழி நடாத்தினார்கள். அச் சமூகவிரோதிகளின் கைகளிலிருந்த ஆயுதங்களும் அன்று எம்மால் கைப்பற்றப்பட்டன. சிங்கள இராணுவ முகாம்களுக்கு அருகிலேயோ இந்திய படை முகாம்களுக்கு உள்ளேயோ கூட தமக்கு பாதுகாப்பு இல்லை என்பதை அச்சமூக விரோதிகள் அதன்பின்பு புரிந்து கொண்டார்கள்.

இந்தியா, இலங்கை அரசுடனும், சமூக விரோத சக்திகளுடனும்இணைந்துகொண்டு எமக்கு எதிராக போர் தொடுத்த நேரம் தயாபரன் தன் படை அணியினருடன் பல முனைகளில் தாக்குதல்களை தொடுத்துக் கொண்டிருந்தான். இந்த நேரத்தில் சிங்கள மயமாக்கப்பட்டு விட்ட பாவற்குளத்தில் ரோந்து வந்த சிங்கள இராணுவத்தினர் மீதும் ஊர்காவல் படையினர்மீதும்ஒரு தாக்குதலை தயாபரன் தலைமையேற்று நடாத்தினான்.

இத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டு. ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன, அத்துடன் இத் தாக்குதல், இரண்டு நாட்டுப் படைகளின் பாதுகாப்புடன் பெருகி வந்த சிங்கள குடியேற்றம் ஒன்றையும் அகற்றியது. இதே போல இன்னொரு எல்லைப்பகுதியான செட்டிக்குளத்திலும் இந்திய இராணுவ வாகனம் ஒன்றின் மீது தயாபரன் தாக்குதலை நடாத்தினான். (இதில் 18 படையினர் கொல்லப்பட்டு 1 பிறன் L.M.G. யும் 7 S.L.R. துப்பாக்கிகளும் எம்மால் கைப்பற்றப்பட்டது) மிக நெருக்கடியான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் சம்பவங்கள் எங்கள் மக்களின் மனங்களில் நம்பிக்கையை விதைத்ததுடன். அரசினரால் திட்டமிடப்பட்டு சந்தர்ப்பத்தை பயன் படுத்தி பரவத் தொடங்கிய சிங்களக் குடியேற்றங்களையும் நிறுத்தின.

இதன் பின் சில காலங்கள் தலைவருடன் நின்றபின் திரும்பவும் தயாபரன் வவுனியா மாவட்டத்திற்கு வந்தான். அந்த நேரம் புதிய பயிற்சி முகாமொன்றை நடத்த அவர்கள் தீர்மானித்தார்கள். இப்பயிற்சி முகாமிற்கு தயாபரனே பொறுப்பாளனாக இருந்து புதிய போராளிகளை உருவாக்கினான். இதன் விளைவாக வவுனியா மாவட்டத்தில் போராளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இதன் பின்பு பரந்து பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய வவுனியா மாவட்டத்தின் எல்லைப் புற பிரதேசங்களில் ஒன்றான செட்டிக்குளம் பகுதிக்கு எமது படை அணி ஒன்றை நிரந்தரமாக அனுப்பி வைக்கக் கூடியதாக இருந்தது. அப் படை அணியின் பொறுப்பாளனாகவும் செட்டிக்குள பிரதேசப் பொறுப்பாளனாகவும் மேஜர் தயாபரனே நியமிக்கப்பட்டான்.

சில காலங்களின் பின் தயாபரன் வவுனியா மாவட்டத்திற்குரிய பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். தயாபரன் வவுனியா மாவட்டத்தில் இயக்கத்தின் வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்தான். பல பயிற்சி முகாம்களை ஏற்படுத்தி புதிய போராளிகளை உருவாக்கியதோடு போர் முறைத் திட்டங்களையும் வகுத்து நடைமுறைப் படுத்தினான்.



வவுனியா மாவட்டப் பொறுப்பாளரான மேஜர் தயாபரன் [சிறிதரன்] இராசேந்திரங்குளம் எனும்கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவன். போராட்ட நடவடிக்கைகளை திட்டமிடுவதிலும், போராளிகளை வழி நடாத்துவதிலும் சிறந்த அனுபவம் பெற்றவனான தயாபரன் பல தாக்குதற் சம்பவங்களிற்கு தலைமையேற்று வழிநடத்தினான். கிராமத்து மக்களிடையே நன்றாக பரீட்சயமாகி ஒன்றிக் கலந்து விட்ட மேஜர் தயாபரன் 18. 6. 1990 அன்று நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான யுத்தத்தில் வீரமரணமடைந்தான்.

இந்த நிலையில் தான் இந்திய இராணுவத்தினரின் வெளியேற்றமும் சிறிலங்கா அரசுடனான பேச்சுவார்த்தையும் ஏற்பட்டது. ஆனாலும் சிறிலங்கா அரசு இராணுவ தயார்ப்படுத்தலையும், தொடர்ச்சியான ஆத்திரமூட்டலையும் செய்து வந்தது. இறுதியில் ஒரு யுத்தத்தை எம் தேசத்தின் மீது கட்டவிழ்த்து விட்டது.

தமிழீழமெங்கும் நடந்த போரில் புலிகள் பல சாதனைகளை நிகழ்த்தி இருந்தனர். சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம்கள் முற்றாக அழிக்கப்பட்டன. பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டு அவர்களது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இந்த யுத்தத்திற்கு வவுனியாவில்தயாபரன் தலைமையேற்று வழிநடாத்திக் கொண்டிருந்தான். வவுனியாவில் மிகப்பெரியஇராணுவ முகாம்களை கொண்டிருந்த போதும் சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேற முடியாமல் இருந்தனர். தங்களின் இயலாமையின் விளைவாக அப்பாவித் தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனத்தை கட்டவிழ்த்து விட்டிருந்தார்கள்.

17.6.1990

மாலை நேரம்., குருமன் காட்டிற்கு வந்த இராணுவத்தினரை எம்மவர்கள் புகையிரதக்கடவை வரை விரட்டிச் சென்று திரும்பினார்கள். மறுநாள் அவ்விடத்தை நோக்கி எம்மவர்கள் இரு பிரிவாக முன்னேறினார்கள். முதலில் சென்ற இருவரும் புகையிரத பாதையில் ஏறியவுடன், அருகிலிருந்த தண்ணீர் தொட்டியிலிருந்து இராணுவத்தினர் சுடத்தொடங்குகிறார்கள். எம்மவர்கள் இருவரும் தமக்குவசதியாக நிலையெடுத்து எதிரியை நோக்கி தமது ஆயுதங்களை இயக்கத் தொடங்கினார்கள்.

எம்மவர்கள் சிலகணங்களில் ஒன்றாகச் சேர்ந்த பின் எதிரி பலத்த எதிர்ப்பைச் சந்திக்கின்றான். தாக்குதலை தயாபரன் தலைமையேற்று வழி நடாத்திக் கொண்டிருந்தான்; புகையிரதப் பாதைக்கு மறுபுறத்தில் இராணுவத்தினர் இருந்த படியால் எம்மவர்கள் எழுந்து நின்றே தாக்குதலை நடாத்திக் கொண்டிருந்தனர். அது ஒரு எல்லைப்புறயுத்தம் மாதிரி., எதிரி வீழ்வதும், அவனை மீட்க பலர் முயல்வதுமாக.........

தயாபரன் ஒரு முதிரை மரத்தின் மறைவில் நின்று கொண்டு தனது M. 16 துப்பாக்கியை எதிரியை நோக்கி இயக்கிக் கொண்டிருந்தான். ஆனால் தண்ணீர் தொட்டியிலிருந்த சிறிலங்கா படையினரின் துப்பாக்கி ரவை ஒன்று தயாபரனின் வயிற்றை ஆழக்காயப்படுத்தியது.

அவன் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தான், அவனுடைய தோழர்கள் அவனை சுற்றிவர இருந்தனர். திட்டமிடுவதிலும், பேராளிகளை வழி நடாத்துவதிலும் தயாபரன் சிறந்த அனுபவம் பெற்றிருந்தான் அதேநேரம் அவன் தன்னுடைய சகதோழர்களை அளவு கடந்து நேசித்தான். அவர்களின் ஆபத்துகளின் போதெல்லாம் அவன் அவர்களுடனேயே இருந்தான். உண்மைதான், நாம் எங்களிற்கிடையே பிரிக்க முடியாத பற்றொன்றை வளர்த்துக் கொள்கின்றோம். அதுதான் எங்களின் ஒவ்வொரு தோழனின் இழப்பின் போதும் நாம் கலங்கி நிற்கின்றோம். எது

(11ஆம் பக்கம் பார்க்க)

# வாருங்கள் ஒன்றாக வடம்பிடிப்போம்.

தமிழீழம் மீண்டும் ரணகளமாய் மாறிவிட்டது. எமது வரலாற்று எதிரி மீண்டும் எமது மக்கள்மீது போர் தொடுத்து நிற்கிறான். மீண்டும் எமது தாயகப் பூமியில் இரத்த ஆறு ஓடுகிறது. கிழக்கிலிருந்து வடக்குவரை அப்பாவித் தமிழர்களின் மரண ஓலம் கேட்கிறது. ஆயிரக்கணக்கில் எமது மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காக்கியுடை அணிந்த சிங்கள ஓநாய்கள் இரத்த வெறி கொண்டு எமது மக்களை வேட்டையாடித் திரிகின்றன, சுற்றி வளைக்கப்பட்டவர்கள் காணாமல் போகிறார்கள். திருமலையிலும் மட்டுநகரிலும் வீதிகளில் அனாதரவாகக்கிடக்கும் பிணங்களைநாய்கள் தின்னுகின்றன. பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட எமது சகோதரிகள் இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்,

அக்கினிக் குண்டுகளை வீசி தமிழர்களை அழிப்பதற்காக எமது ஆகாயத்தில் தினமும் விமானக் கழுகுகள் வட்டமிடுகின்றன. வீடுகள் மீது விழும் எரிகுண்டுப் பீப்பாக்கள் வெடித்து கருகிப்போன எமது தங்கையர் - தம்பியர் எத்தனைபேர். எமது மக்கள் தமது சொந்தமண்ணில் அகதிகளாய் அல்லல்படுகிறார்கள். நாட்டை விட்டு இடம்பெயரும் அகதிகளின் பிணங்கள் கரை ஒதுங்கி நாறுகின்றன,

நீ இன்னும் ஏன் விழித்துக் கொள்ளவில்லை?

சிங்கள தேசம் இன எழுச்சி கொண்டு தமிழருக்கு எதிராக அணிதிரண்டு நிற்கிறது. வர்க்க வேறுபாடின்றி, சாதி வேறுபாடின்றி, மதவேறுபாடின்றி கட்சிவேறுபாடின்றி, கருத்துவேறுபாடின்றி சிங்கள இனம் ஒன்று திரண்டு போர்க் கோலம் பூண்டு நிற்கிறது.

தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தில் களம் குதிக்க ஐம்பதினாயிரம் சிங்கள இளைஞர்கள் காத்து நிற்கிறார்கள். தமிழின அழிப்பிற்கு வரிந்து கட்டி நிற்கிறது சிங்கள இனவாதப் பூதம்.

நீ இன்னும் ஏன் விழித்துக் கொள்ளவில்லை?

வரிப்புலிகளாக, கடற்புலிகளாக, கரும்புலிகளாக உனது தம்பிமார் தனித்து நின்று களத்தில் போராடுகிறார்கள். உன்னைப் பாதுகாக்க, உனது மண்ணைப் பாதுகாக்க உனது சகோதரர்கள் தன்னுயிரை மாய்க்கிறார்கள்.

சாவு கதவைத் தட்டுகிறது. விழித்துக்கொள். புலிப் படையில் சேர்ந்துகொள். தமிழீழத்தை மீட்க.

# போராட்டத்தேரை இழுத்தெங்கள் தேசத்தை விடுவிப்போம்.

"ஒரு சுதந்திரமான, இறைமையுடைய தனியரசை அமைப்பதன் மூலமே தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படும்.

சுதந்திர தமிழீழமே எமது அசைக்க முடியாத அரசியல் இலட்சியம்.

எமது தாயகத்தை மீட்டு சுதந்திரத் தனியரசைப் பிரகடனப் படுத்தும்வரை நாம் தொடர்ந்து போராடியே தீருவோம்.

-தலைவர் வே. பிரபாகரன்.




வீசுகின்ற காற்று அடிமையா?
விரிந்து கொள்ளும் பூக்கள் அடிமையா?
மூசி மூசிக் கரைகளை நாளுமே
முத்தம் செய்யும் அலைகள் அடிமையா?
இல்லையே; தமிழ் ஈழத்து மண்ணிலே....
இருக்கும் தமிழனேன் அடிமைகள் ஆகனும்.
தொல்லைகள் துயர் ஏன்பட வேண்டுமோம்.
துணிந்து நின்றிடில் வெற்றி பிறக்குமாம்.

o o o

அடிமையாகிக் குனிந்து நிமிரவோ?
அன்றிக் கோழையாய் வாழவோ விரும்பிலேன்.
உரிமையோடு என் தாயகப் பூமியில்
உலவுகின்ற நாள் வரும் என்றுமே
எதிரியின்வர வையெதிர் பார்த்துமே
இந்தச் "சென்றி" யில் காவல் இருக்கிறேன்.

o o o

இருளிற் கிடப்பது எதிரியின் "பாசறை"
இடதுகரையவன் "காவல் அரண்களாம்"
அருகிலிருப்பதும் அவனது "மினிமுகாம்"
அவனைச் சுற்றியோ பெரிய "அகழிகள்"
எங்கள் மண்ணிலே எதிரியின் சுவடுகள்
என்ற பின்னரும்; பள்ளியில் படித்திடத்
தங்கவில்லையே என்மனம்; ஆதலால்
தமிழர் தாயகம் காண எழுந்துள்ளேன்.

o o o

குண்டு வீசும் கழுகுகள் வந்தெமைக்
குதறிக் கொல்லலாம்; காவல் அரணிலே
நின்று கொள்ளும் வேளையில் எம்மை
ஏதிரிகள் குண்டு வீசிச் சரிக்கலாம்.
என்கரத்திலே. . இருக்கும் துவக்குகள்
இளந்தலைமுறைக் கைகளில் ஏறிடும்.
என்னைக் கொல்லலாம்; ஆயினும் "விடுதலை"
என்ற மந்திர வார்த்தை அழியுமோ?

o o o

நாங்கள் ஓடித் திரிந்த மண்ணிலே. .
நாறுகின்ற பிணங்களாய் வீழ்வதா?
தூங்கித் தூங்கிப் பொழுதைக் கழிப்பதா?
சோற்று மாடுகள்போலத் திரிவதா?
நெஞ்சில் குண்டுகள் தாங்கி மடிவதும்
நேரெதிராகவே எதிரியின் பாசறை
அஞ்சிப்பகைவர்கள் ஆடப் புகுந்தொரு
அனலை மூட்டுதல்... புலிகள் சரித்திரம்.

o o o

என்னை மீறி எதிரி வருவானா?
எதிரியென்ன என்னிலும் பெரியவனா?
"சின்னச் சின்ன பையன்கள்" என்று
சிரித்த இந்திய இராணுவம்; எங்களின்
"கண்ணி வெடியிலே... காலை இழந்தது.
கப்பலேறிக் கடலைக் கடந்தது.
விண்ணைக் கூட இடித்து விழுத்திடும்
வீரம் கொண்டது வேங்கைகள் கூட்டமாம்.

o o o

நாளையே தமிழ் ஈழம் பிறந்திடும்
நானிலையெனும் போதிலும்; என் தமிழ்க்
காளையொருவன் புலிக்கொடி கட்டுவான்.
காற்றில் அக்கொடி உயரப் பறந்திடும்.
பூக்கள் கொண்டு என் கல்லறை மீதினிலே...
புதிய தலைமுறை வைத்து வணங்குவர்.
ஏக்கமின்றி அக்கணப் போதிலே...
எழுந்து நின்று அஞ்சலி செய்குவர்.

## நிறுவமையப்படுத்....

(4ஆம் பக்கத் தொடர்)

ஓர் எல்லைக்கப்பால் அவர்களிடமும் கூட தயக்க மனப்பாங்கு உருவாகின்றது. மேற்கூறிய காரணிகளினாலும், அவர்கள் வாழ்கின்ற சூழல்களினாலும் சிறு பிராயத்திலிருந்தேபுகுத்தப்பட்டபேரினவாதமானது அவர்களது ஆழமனதிற் புதைந்துகிடந்து ஓர் எல்லைக்கப்பால் அவர்களிடமும் அவர்களை அறியாமலே பேரினவாதம் தலையெடுத்துவிடுகின்றது.

### பேரினவாதத்திற்கு அடிபணியும் மூன்று வகை

அதாவது இந்த ரகத்தினர் பல பிரிவுகளைச் சார்ந்தவர்களாய் இருப்பர். ஒரு பகுதியினர் கூறுவர் தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு தான் அதனை நியாயமாகத் தீர்த்து வைக்கத்தான் வேண்டும் என்று. பிரச்சினை உண்டு என்பதும் நியாயமாய் தீர்க்க வேண்டும் என்பதும், அவர்களிடமுள்ள ஒரு நெகிழ்ச்சியைக் காட்டுமே தவிர அதற்கப்பாற் செல்வதில்லை' அடுத்த பிரிவினர் கூறுவர் தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு தான் அவர்களுக்கு மாகாணசபை பிரதேசசபை போன்ற சபைகளை வழங்கினாற் போதுமென்பர். மூன்றாவது பிரிவினர் கூறுவர் தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டுதான் ஆனால் அவர்கள் பிரிந்து செல்லும் கோரிக்கையை முன் வைக்கக் கூடாது என்பர்இறுதியில்இந்த மூன்று பிரிவினரும் பேரினவாதத்திற்கு அடிபணியும் வகையில் தமது மொத்தக் குரலை ஒரே மாதிரிக் காட்டுவர். அதாவது இந்த உரிமைகளுக்காகப் போராடுவதைக் கூட ''பிற்போக்கென்றும்,'' ''பயங்கரவாதம்'' என்றும் முத்திரை குத்துவர். இதன் மூலம் இவர்களும் பேரினவாதத்தின் மீதுள்ள தமது இறுதிப்பற்றை வெளிப்படுத்திவிடுவர்.

பொதுவாக ஒரு சிங்கள நபரை எடுத்துக் கொண்டால் அவரது வாழ்நிலையாலும், சுற்றுச்சூழலாலும், கருத்தேற்றத்தாலும் அவரை அறியாமலே அவருக்குள் பேரினவாதம் குடிகொண்டு விடுகிறது. இந்த வகையில் பேரின வாதமானது சிங்கள மக்களின் அன்றாட வாழ்வுடன் இணைந்து வாழ்வுமயப்படுத்தப்பட்டு விட்டது. இங்குதான் பேரினவாதம் வாழ்வுமயமாகியது.

அரசியல் வயிற்றுப் பிளைப்புக்கு மதமும், மதவயிற்றுப் பிளைப்புக்கு அரசியலுமாக ஒன்றில் ஒன்று தங்கிநின்று ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தன. மதத்தைக் காட்டி அரசியல் அதிகாரத்திற்கு வருவோர் நிர்வாக இயந்திரத்தை மதமயமாக்கினர். இதனால் சிங்கள - பௌத்த நிர்வாக அதிகாரத்துவம் உருவாகியது. அரசியல் அதிகாரத்திலுள்ளோர் சட்டங்களை இயற்றுவர்; நிர்வாக அதிகாரத்தில் உள்ளோர் அவற்றைநடைமுறைப் படுத்துவர். இந்த அரசியல் அதிகாரத்துவமும், நிர்வாக அதிகாரத்துவமும் ஒரே தன்மை வாய்ந்தவையாய் இயங்குவதால் நாட்டின்சமூக, பொருளாதார, கல்வி நடவடிக்கைகளும் பேரினவாதத் தன்மை கொண்டதாகியது.

எனவே இன்று இலங்கையில் அரசு, அரசாங்கம், பௌத்தம், நிர்வாகம், கல்வி, பொருளாதாரம் ஆகிய இன்னோரன்ன அம்சங்கள் அனைத்தும் ஒருங்குசேர இணைந்து பேரினவாத நிறுவன மயப்பட்டு விட்டன. ஒன்றை இன்னொன்று நிர்ணயிக்கக் கூடியதாய் அதே வேளை ஒன்றைவிட்டு இன்னொன்று பிரிந்து இயங்க முடியாததாய் அனைத்தும் கூட்டுமொத்தமாக பேரினவாத நிறுவனமயப்பட்டு விட்டன.

## உடும்பன்குளம் ....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மங்களில் எல்லாம் இன்று சிங்களவர்கள் வாழ்கிறார்கள். அம்பாறை மாவட்டத்தை ஒரு முழுமையான சிங்கள மாவட்டமாக மாற்ற முயலும் சிங்கள அரசினரின் திட்டமிட்ட செயல்கள் தான் இவை. இந்தக் கொலைகாரர் உண்மையில் ஆட்சியாளர்கள் தான்.

இந்தக் கொலைக்களத்தின் பார்வையாளர்களாக, இன்னும் சுடாமல் வைத்திருந்த மூன்று உழவு யந்திர சாரதிகளும் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அந்த அப்பாவி மக்களின் மீதான வெற்றியுடனும், இவர்களிடம் கொள்ளையிடப்பட்டநெல்லு மூடைகளுடனும் அம்பாறை முகாமை நோக்கி வீதி வழியாக அந்த அராஜக வாதிகளின் அணிவகுப்பு நடந்து கொண்டிருந்தது. அவர்களுடன் அழைத்துச் செல்லப்பட்ட உழவு இயந்திரச் சாரதிகளான புவனேந்திரன், செல்லையா, திவ்வியநாதன் ஆகிய மூவரும். - அதன் பின் திரும்பி வரவே இல்லை. அவர்களுடன் சேர்த்து எல்லாமாக 60 அப்பாவித் தமிழர்கள் அன்று அந்தக் கிராமத்தில் கொல்லப்பட்டார்கள் மறு நாள் அரச வானொலி அறிவித்தது...

**லகுகல காட்டுப் பகுதியில் பயங்கர வாதிகளின் முகாம் ஒன்று அழிக்கப்பட்டு பல பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். ஒரு மணி நேரம் நடந்த இந்தச் சண்டையில் 40 பயங்கரவாதிகளின் உடல்கள் எடுக்கப்பட்டன. மேலதிக உடல்கள்தேடப்படுகின்றன.**

**சிங்கள அரசின் பார்வையில் இத் தமிழர்கள் பயங்கரவாதிகள். இந்த நிலை இப்பொழுதும் தொடர்கிறது. உடும்பன்குளம் போன்று பல கிராமப் படுகொலைகள் செய்யப்பட்டுவிட்டன. ஆனால் நாம் இன்றும் பாதுகாப்பற்றவராக வாழ்கின்றோம் நாம் எமக்கு பாதுகாப்பினை தேட வேண்டும். அந்தப் பாதுகாப்பு என்பது மக்கள் அனைவரும் போராட்டத்தில் பங்களிப்பதுதான். இனிமேலும் அடிமைகளாக நாம் வாழ்வதைவிட ஆயுதங்களை ஏந்தி எமது மண்ணையும் மக்களையும் பாதுகாப்போம்.**

---

இந்தப் பேரினவாதம் தமிழ் பேசும் மக்களைக் கபளீகரம் செய்வதற்காக தனது வாயை அகலவிரித்து படிப்படியாகத் தனது பற்களைப் பதிக்கத் தொடங்கியது. இதன் விளைவே ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டமாகும்.

**டி. எஸ். சேனனாயக்கா, டட்லி சேனனாயக்கா, சேர். ஜோன் கொத்தலாவலை, எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரனாயக்கா டாக்டர். தகனாயக்கா, ஸ்ரீமாவோ பண்டாரனாயக்கா, ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாஸா என “சுதந்திரத்தின்'' பின் பதவிக்கு வந்த சகல சிங்களத் தலைவர்களும் தத்தமது பங்கிற்கு தமது கோரப் பற்களை தமிழ் பேசும் மக்கள் மீது பதிக்கத் தவறவில்லை. இவர்கள் அனைவரும் தலைமை தாங்கியது சிங்கள - பௌத்த பேரினவாதத்திற்கே தவிர பல்லின மக்களுக்கல்ல.**

## உளவாளிகள்: எச்சரிக்கை

''இன்றைய போராட்டச் சூழலில் பலர் பிற பகுதிகளில் இருந்து யாழ் மாவட்டத்திற்குவருகின்றார்கள். பலர் இங்கிருந்து பிற பகுதிகளுக்குச் செல்கின்றார்கள்.

அண்மைக் காலத்தில் சிங்கள அரசால் பிறபகுதிகளில் இருந்து (குறிப்பாக கொழும்பில்) உளவாளிகளாக யாழ். மாவட்டத்திற்கு அனுப்பப்பட்ட பலரைக் கைது செய்துள்ளோம்.

அதேபோல் இங்கிருந்து சிங்களப் படைக்குத் தகவல்தர வெளியே செல்ல முற்பட்டசிலரைக் கைது செய்துள்ளோம். இவர்களிடம் இருந்து பல அதிமுக்கிய தகவல்களைக் கொண்ட வரைபடங்கள், ஆவணங்கள் புகைப்படங்கள், என்பன எம்மால் கைப்பற்றப் பட்டுள்ளன. இப்படியாக தகவல் பெறும் உளவாளிகளைக் கண்டுபிடிக்க, கட்டுப்படுத்தநாம்யாழ்.மாவட்டத்திற்குள் வருவோரினதும் யாழ். மாவட்டத்தை விட்டு வெளியேறுவோரினதும் தகவல்களைப் பெற உள்ளோம்.

இதனால் பொது மக்களுக்கு சில சிரமங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். போராட்ட காலத்தில் இப்படியான உளவாளிகளை ஊடுருவ விடாமல் தடுப்பது பொதுமக்களின் கடமையாகும். எனவே ஏற்படும் சிரமங்களை பொருட்படுத்தாமல் பொது மக்கள் எமக்கு முழுமையானஒத்துழைப்பைத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்'

## ஒரு போராளியின்...

(9ம் பக்கம் தொடர்ச்சி)

வுமே செய்ய முடியாத சில கணங்களை சந்திக்கின்றோம் ஒவ்வொரு தோழனின் இழப்பின் போதும் தயாபரன் தவிப்பான், ஆனால் இன்று தயாபரனை இழந்து விடுவோமோ என நாம் தவித்துக் கொண்டிருந்தோம்.


தயாபரன் தன்தோழர்களை ஆழமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் வேதனையினூடே அவனது வார்த்தைகள் மௌனமாக வெளிவந்து கொண்டிருந்தன. அவை அறிவுரைகளாக, கட்டளைகளாக......... அவன் மௌனமாகி விட்டான்.

மலரப் போகும் எமது தமிழீழ தேசத்தில் நாம் உயிருடன் இருப்போமோ இல்லையோ என்பது கேள்விக் குறியே. இது எமது மண்ணை மீட்பதற்கான போர் இதில் மரணத்தை நாம் தழுவ நேரிடலாம். ஆனால் எமது மக்கள்விடுதலை பெற்று சுதந்திர தேசத்தில் மகிழ்ச்சிகரமாக வாழ்வார்கள் என்பது தான் எமது மகிழ்ச்சியாகும்.

தயாபரன் இன்று எம்மோடு இல்லை இப்படி இன்று எத்தனையோ போராளிகள் தமது எண்ணங்களை, உணர்வுகளை எம்மிடையே விட்டுச் சென்றுள்ளார்கள் இவை எமது மக்களினது விடிவிற்கான மரணங்கள்.

இடர் பல நேரினும்
எதிரிகள் ஏவிய குண்டுகள்
எம்மீது பாயினும்:
எம் கரம் ஓயாது,
கனன்று கொண்டே......
விடுதலை நோக்கியே
படையணி ஒன்றிங்கு
விரைந்திடும் எம்
எல்லை தனில்

\- ஜெயம்



# மில்லர்

மாண்டு போனான்
மறவர்களின் மன்னன்
என்று
மதில்கள்
பறை சாற்றுகின்றன
உன் வீரமரணத்தை
விபரிக்கும்
நம் தேசத்து
மதில்களுக்குத்தான்
எத்தனை ...... எத்தனை
மகிழ்ச்சி

மக்கு மதில்களே
நாங்கள்
உங்களைப் பார்த்து
கண்களைத்
துடைக்கவில்லை
மில்லரைப் பார்த்து
விம்மி அழுகின்றோம்

நெல்லியடி முகாமை
நிர்மூலமாக்க
நீ சென்ற நிலையை
நேரில் நான்
பார்க்கவில்லைத்தான்
ஆனால்
பார்த்தவர்களின்
தகவல்களை
மறக்கமுடியவில்லை

மரணத்துடன்
தோழமை பூண்டது
மறவர் கூட்டம்
ஆனால் நீ
மரணத்தையே
மணம் புரிந்து
அதன்
மடியில் துயின்றவன்

சாவை முறியடிக்க
சிலர்
சாத்திரம் பார்க்கும்
நேரம்
சாவையேமுதுகிலேற்றி
சரித்திரம்
படைத்துவிட்டாய்

மரணத்தைக் கண்டு
சிலர்
கார் பிடித்துச்
சென்ற நேரம்
நீ மரணத்தையே
காரில் ஏற்றிச்
சென்றவன்

நீ நுழைந்ததும் எழுந்த
பாரிய சத்தத்தின்
பயங்கர அமைதியின்
பின்
உன் குரல்
எங்காவது
ஒலிக்கின்றதா?
என்று
எம் காதுகளைக்
கூர்மையாக்கினோம்

நிமிடங்கள்
மணித்தியாலங்களாக
மாற
கண்களை
கண்ணீர் திரையிட
வெற்றி பெற்றிருந்தும்
வெறுமை உணர்வுடன்
திரும்பினோம்

மில்லரே
உன் கல்லறை
காங்கேசன்துறை
சீமேந்தால்
கட்டப்பட்டதல்ல
தேசத்தின் மத்தியில்
தியாகத்தின்
திரட்சியால்
உருவாக்கப்பட்டது

உன் கல்லறை
கண்ணீர்
விடுவதற்கல்ல
கல்விக் கூடமாகிப்
பாடம் படிப்பதற்கு

ஐந்தும், இரண்டும்
அங்கே
அறிவு
உறுத்தப்படுவதில்லை
தியாகமும்,
விடுதலையுமே
விரிவுரைகளாகின்றன

அங்கே
பரீட்சைகள்
நடைபெறுவதில்லை
அநீதிக்கெதிரான
படையெடுப்புகளே
நிகழ்கின்றன.

**கரும்புலி கப்டன் மில்லரின்**
**3வது வருட நினைவு நாள்**
**05 - 07 - 1990**

# வீர வணக்கம்



கப்டன். பிரபா
(தி. தாரணி - மயிலிட்டி)
கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்
22 - 07 - 90



கப்டன் உஷா
(இ. லலிதாம்பிகை - முள்ளியவளை)
10 - 07 - 90



மேஜர் வசந்த்
21 - 06 - 90



ராவ்
15 - 06 - 90

11-06-90 அன்று கும்புறுமுனை இராணுவ முகாம் தாக்குதலின் போது ...

2வது லெப். மாசல் (மா. தமசிவாயம்) (இன்னியடி மட்டக்களப்பு)
இரி (பூ. செல்வராஜா) (தொறுவில் ,, )
சபேசன் (மண்டூர் ,, )
செந்தில் (இன்னியடி ,, )
சகுந்தர் (கோரகழிமடு ,, )

11-06-90 அன்று கல்குடா இராணுவ முகாம் தாக்குதலின் போது...

கிதோ (விழாவெட்டுவான், மட்டு.)
சிவா (சா. நகுலன்ராஜா) ( மட்டக்களப்பு )

11-06-90 அன்று களுவாஞ்சிக்குடி இராணுவ முகாம் தாக்குதலின் போது...

கபூர் (மு. முகமது சமீம்) (காங்கேயன்ஓடை, மட்டு.)
நவயுகன் (த, திருச்செல்வம்) (கொக்கட்டிச்சோலை மட்டு.)
விமலநாதன் (பா. ரவி) (மகிழவெட்டுவான், மட்டு.)
வசந்தராஜ் (கோயில் போரைதீவு. மட்டு.)

12-06-90 களுவாஞ்சிக்குடி இராணுவ முகாம் தாக்குதலின் போது...

மேஜர் நேசன் (ப. ராஜு) (அக்கரைப் பற்றுஅம்பாறை)
மொனதா (யோ. பொற்செல்வன்) (மண்டூர், அம்பாறை)
ஜெகதீசன் (அரசடித்தீவு, மட்டு.)

12-06-90 அன்று கும்புறுமுனை இராணுவ முகாம் தாக்குதலின் போது...
கப்டன் வாமன் (சந்திவெளி, மட்டக்களப்பு)
லெப். ஜெமினின் (வாழைச்சேனை, ,, )
லெப். சொபிக் (ஒட்டமாவடி ,, )
தாசில் ( மட்டக்களப்பு )
குயிலி (ச. தங்கவடிவேல்) (இலுப்பையடிச்சேனை ,, )
ராஜா (மயிலாம்பாவெளி ,, )
கடாபி ( மட்டக்களப்பு )
சசிக்குமார் (வாழைச்சேனை ,, )
நேரு (ந. சுகேந்திரன்) (வந்தாறுமூலை ,, )
பிரபா (வே. கண்ணதாசன்) (கிரான் ,, )
ஜனான் (த. ஜெகநாதன்) (கிரான் ,, )
பீற்றர் (பூ. சந்திரகாந்தன்) (மன்னம்பிட்டி ,, )
பழனி (ந. அற்புதராஜா) (மொறக்கொட்டாஞ்சேனை ,, )

13-06-90 அன்று களுவாஞ்சிக்குடி இராணுவ முகாம் தாக்குதலின் போது...
ஜெகநேசன் (கி. சேதுராஜா) (போரைதீவு, மட்டக்களப்பு)
திலீபன் (காத்தான்குடி, அம்பாறை)
சதீஸ் (அக்கரைப்பற்று, அம்பாறை)

13-06-90 அன்று கும்புறுமுனை இராணுவ முகாம் தாக்குதலின் போது...
குமரேசன் (பாலையடிவெட்டை, மட்டு.)

13-06-90 அன்று ஜெயபுர வில் இராணுவத்தினருடனான மோதலின் போது...
தொமி (கல்லடி, திருக்கோணமலை)
சுகந்தன் (வி. ஹேமாங்கதன்) திருக்கோணமலை)

13-06-90 அன்று திருமலை3ம் கட்டை பொலிஸ் நிலைய தாக்குதலின் போது...
சங்கிலி (ச. சதீஸ்குமார்) (திருக்கோணமலை)

13-06-90 அன்று கின்னியாவில் இராணுவத்துடனான மோதலின் போது...
கப்டன் ஜெகன் (பன்குளம், திருக்கோணமலை)
அருண் (ச. வீரசிங்கம்) (பன்குளம், திருக்கோணமலை)
சீனு (ஆலங்கேணி, திருக்கோணமலை)

14-06-90 அன்று திருமலை 3ம் கட்டையில் மோதலின் போது...
முருகனதாஸ் (ப. புஸ்பாகரன்) (சல்லி, சாம்பல்தீவு திருமலை)
கலையன் (புல்மோட்டை. திருமலை)

14-06-90 அன்று கின்னியாவில் ரோந்துப்படகு மீது தாக்குதலின் போது---
தேவா. (ஞா. விக்கினேஸ்வரன்) (சிப்பித்திடல், தம்பலகாமம் திருக்கோணமலை)
அன்ரன் (96ம் கட்டை, தம்பலகாமம். திருக்கோணமலை)

14-06-90 அன்று களுவாஞ்சிக்குடியில் படையினருடனான மோதலின் போது...
சுதர்சன் (கிரான், மட்டக்களப்பு)

14-06-90 அன்று கிளிநொச்சி இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது ...
லெப். ரஞ்சன் (பெ. சண்முகநாதன்) (சன்னாசிபரந்தன், வவுனியா)
குணேஸ் (ரவி) (உடையார்கட்டு, முல்லைத்தீவு)

14-06-90 அன்று மாங்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது...
மேஜர் சிங்கன் (இ. மகேந்திரன்) (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)
கப்டன் வினோத் (வவுனியா)
கப்டன் பனா (த. சித்திரன்) (கிளிநொச்சி)
கப்டன் கஜன்(தி. பொன்னம்பலம்) (மாமடுநெடுங்கேணி, முல்லை.)
நளன் (கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு)
காமினி (கிளிநொச்சி)
சர்வா (சு. புவனேஸ்வரன்) (மல்லாவி, முல்லைத்தீவு)
சுயாத் (சு. குமரகுருநாதன்) (பாண்டியன்குளம் முல்லைத்தீவு)
லோலோ (செ. சிவராசன்) (நெடுங்கேணி முல்லைத்தீவு)
முகமட் (இ. குமரதாசன்) (வட்டக்கச்சி கிளிநொச்சி)
அரி (ஆ. மோகனதாஸ்) (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி)
வதனன் (வட்டக்கச்சி, கிளிநொச்சி)
சிறி (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)
சசி (வ. குணபாலசிங்கம்) (ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு)

14-06-90 அன்று தலைமன்னார் இராணுவமுகாம் தாக்குதலின் போது...
புலோமின் (தெய்வேந்திரன்) (கட்டையடம்பன், மன்னார்)

15-06-90 அன்று இளக்கந்தையில் (மூதூர்) மோதலின் போது ...
ஜெகன் (ஆப்தீன் முகமட் யூஷெப்) (குச்சவெளி, திருமலை)

15-06-90 அன்றுபொத்துவிலில் படையினர் பதுங்கித் தாக்கியபோது ...
ராவ் (சே. முகம்மது றபீக்) (பொத்துவில், அம்பாறை)
சாந்தன் (இரா. கதிர்காமநாதன்) (நற்பிட்டிமுனை ,, )
டேவிற் (பொத்துவில், அம்பாறை)

15-06-90 அன்று மாங்குளத்தில் வான்படை தாக்கிய போது ...
2 வது லெப் கணேசமூர்த்தி (இரா. சிவபெருமாள்) (சுப்பைக்குளம் வவுனியா)

15-06-90 அன்று மாங்குளத்தில் நேரடி மோதலின் போது ...
தெஜி



நவயுகன்



குயிலி



பிரபா



பீற்றர்



பழனி

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்